மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

**Focus**

## மறைமுக இன ஒதுக்கல்

– டாக்டர் சாந்தா சின்ஹா
(தலைவர், தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்)

நாடு முழுவதும் உள்ள ஏழைப் பெற்றோரிடையே அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி வேண்டும் என்ற கோரிக்கை ஒரு வெடிப்பாக எழுந்துள்ளது. அவர்களைப் பொறுத்தவரையில் கல்வி என்பது வறுமை, விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல் என்ற சங்கிலியை உடைப்பதற்கான கருவியாகும். தங்களது குழந்தைகளுக்கு கல்வி கிடைக்கச் செய்ய அவர்கள் பெரும் தியாகங்கள் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பு, பீகார் மாநிலத்தின் ஜமூயி மாவட்டத்தைச் சேர்ந்த ஜாஜா என்ற பழங்குடி மக்கள் வட்டாரத்தில், வாழ்விட பாலப் பயிற்சித் திட்டம் (ஆர்பிசி) என்ற பயிற்சி முகாம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (என்சிபிசிஆர்) குழு ஒன்று சென்றிருந்தது. சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் அந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த பொது விசாரணை நிகழ்ச்சியில், உள்ளூர் இளைஞர்கள் மற்றும் சிற்றூராட்சி உறுப்பினர்களின் பங்கேற்புடன் சமூக ரீதியாக மக்களைத் திரட்டுகிற ஒரு முனைப்பு மிக்க திட்டம் எப்படி சுமார் 400 பழங்குடி சிறுமிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது என்பதை அறியமுடிந்தது. அந்தச் சிறுமிகள் அதற்கு முன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றறியாதவர்கள். இப்போது ஆர்பிசி முகாமில் பங்கேற்க தயாராக இருந்தார்கள்.

ஆனால், அரசாங்கத்தின் ஏற்பாட்டில் 50 குழந்தைகளுக்கு மட்டுமே இடம் இருந்தது. பழங்குடி சமூகத்தினர், 14 வயதை அடைந்த பெண் குழந்தைகள் எல்லோரும் அந்த பயிற்சிப் பாலத் திட்டத்தில் இணைந்து பயில்வது என முடிவு செய்தனர். ஏனெனில், அவர்களுக்கு 15 வயது ஆகிவிட்டால், திட்டத்தின் கீழ் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை அவர்கள் இழந்துவிடுவார்கள். நிகழ்ச்சி முடிந்த பிறகு என்சிபிசிஆர் குழுவினர் புறப்பட்டனர். 2 கிலோ மீட்டர் தூரத்தில் அவர்களை சில பழங்குடிப் பெண்கள் தடுத்தி நிறுத்தினார்கள். தங்களுடைய குழந்தைகள் 10ம் வகுப்பு வரையாவது படிக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக தெரிவித்தனர். ஆனால் தங்களுடைய வட்டாரத்தில் 5ம் வகுப்புக்கு மேல் உள்ள பள்ளிகள் எதுவும் கிடையாது என்றனர். அதனால் தங்கள் குழந்தைகள், சுமார் 16 கி.மீ நடந்து சென்று அங்குள்ள பள்ளியில் படிக்க வேண்டியிருக்கிறது என்று கூறினர். அந்தப் பள்ளியிலும் 8ம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது. அந்தப் பெண்களிடம் என்சிபிசிஆர் குழுவினர், “நீங்கள் ஏன் இந்தப் பிரச்சனையை பொது விசாரணையில் எழுப்பவில்லை,” என்று கேட்டனர். அதற்கு அந்தப் பெண்கள் ஒரு கேலியான தொனிவுடன், “இதை நாங்கள்தான் அதிகாரிகளுக்கு சொல்ல வேண்டுமா? அவர்களுக்கே எங்கள் குழந்தைகளும் 10ம்

வகுப்பு வரையிலும் அதற்கு மேலும் படிக்க வேண்டும் என்பது தெரியாதா,'' என்று கேட்டனர். இது பழங்குடி பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் கல்வியின் அக்கறையில்லை குறிப்பாக பெண் குழந்தைகள் பள்ளி செல்வதை அவர்கள் விரும்பவில்லை என்ற வழக்கமான கருத்தை உடைக்கிறது.

சத்திஷ்கர் மாநிலத்தின் தாண்டேவாடா மாவட்டம் நக்சலைட்டுகள் நடமாட்டத்தாலும் காவல்துறையினர் முகாமிட்டிருப்பதாலும் அமைதி குலைந்துப் போயிருக்கிற பகுதியாகும். அந்த வட்டாரத்து மக்கள் தங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துவது கூட அங்கே கடினமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. கடந்த 6 மாதங்களில், சுக்மா வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 6 சிற்றூராட்சிகள் அந்த கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளை என்சிபிசிஆர் மற்றும் சில என்ஜிஓ–க்கள் உதவியுடன் உள்ளூர் பள்ளிக்கூடங்களில் சேர்த்தன. இந்த கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்லும் செய்தி அருகில் உள்ள வட்டாரங்களுக்கும் பரவியது. பழங்குடியினரைச் சேர்ந்த பெற்றோர் பலரும், தாங்கள் அனுபவித்து வந்த துயரங்களுக்கு இறுதி முடிவு கட்ட தங்களது குழந்தைகளுக்கு கல்வி வேண்டும் என்று கருதினார்கள். தங்களது தலையெழுத்து தங்களோடு போகட்டும், தங்கள் குழந்தைகள் அதை அனுபவிக்க வேண்டாம் என்று நினைத்தார்கள். இதேபோல் திரிபுரா, அஸ்ஸாம், மாநிலங்களில் தங்களது இடங்களிலிருந்து வெளியேற நேர்ந்து, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளவர்களும் தங்களது குழந்தைகளுக்கு கல்வி தேவை என அழுத்தமாகக் கோருகிறார்கள். மணிப்பூர் மாநிலத்திலும், எச்ஐவி–எய்ட்ஸ் பாதிப்பு உள்ள குழந்தைகளும் கூட கல்வி பெற விரும்புகிறார்கள். ராஜஸ்தானில் இருந்து குஜராத்துக்கும், ஒரிசாவிலிருந்து ஆந்திராவுக்கும், மஹாராஷ்டிராவிலிருந்து குஜராத்துக்கும், பீகாரிலிருந்து மும்பைக்கும் இடம் பெயர்ந்து சென்று பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களைச் சென்றடையக் கூடிய திறன் நமது கல்வி அமைப்புக்கு இருக்குமானால், இந்தக் குழந்தைகள் தொழிலாளர்களாக மாறியிருக்க மாட்டார்கள் என்பது தெரியவந்தது. இந்த வட்டாரங்களில் நடத்தப்பட்ட அனைத்து பொது விசாரணைகளிலும், மீட்கப்பட்ட குழந்தைகள் தங்களுக்கு கல்வி வேண்டும் என்றே குரல் எழுப்பினார்கள். தங்களுடைய பள்ளிக் கல்விக்காக அவர்கள் கடுமையாக போராட வேண்டியிருக்கிறது என்பதை என்சிபிசிஆர் குழுவினர் விசாரித்து அறிந்தனர். ஏழைகள் தங்களது வாழ்க்கை நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றால் அது கல்வியால் மட்டுமே சாத்தியமாகும் என்பது தெளிவு.

### சமூக நெறிமுறை இல்லாமை:

கல்வி தேவை என்ற கோரிக்கை அதிகரித்து வருகின்ற போதிலும் ஏராளமான குழந்தைகள் பள்ளிகளில் பயிலாதவர்களாகவே இருக்கிறார்கள். இது முரண்பாடாக தோன்றினாலும், இதற்கான காரணங்கள் வெளிப்படையானது. முதலாவதாக குழந்தை உழைப்பு முறையை சமுதாயம் சகித்துக் கொள்கிறது. கல்வியை உறுதிப்படுத்துகிற சமூக நெறிமுறை என்பதும் இல்லை. ஏழைக் குழந்தைகள் வேலைக்குச் செல்வது என்பது சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. குழந்தைகள் பள்ளிக்கு வெளியே இருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியையோ, ஆவேசத்தையோ ஏற்படுத்த தவறுகிறது. சொல்லப்போனால், ஏராளமான குழந்தைகள் பள்ளிகளுக்கு வெளியே இருப்பதும் ஏதேனும் ஒரு வேலையில் ஈடுபடுவதும் நியாயப்படுத்தப்படுகிறது. இந்தக் குழந்தைகள் ஏழைகள் என்பதால் அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது, அவர்களது குடும்பங்கள் உயிர்வாழ இந்தக் குழந்தைகளின் வருமானமும் தேவைப்படுகிறது என்பதாக விளக்கம் அளிக்கப்படுகிறது.

**பள்ளிகள் உள்ளிட்ட நமது கல்விமுறை மொத்தமுமே முதல் தலைமுறையாக கல்வி பயில வருபவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, தனியார் பள்ளிகளுடன் போட்டிப்போட வேண்டும் என்ற வேகத்தில் அரசுப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகள் சீருடை அணிய கட்டாயப்படுத்தப்படுகிறது.**

### உதவாத உள்கட்டமைப்பு:

பல குழந்தைகள் பள்ளிப்படிப்பை தொடர முடியாமல் பாதியில் வெளியேறுவதற்கு காரணம் போதுமான பள்ளிகள், ஆசிரியர்கள், உள்கட்டுமானம் போன்றவை இல்லாததுதான். குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதற்கான இயக்கங்கள், பள்ளிகளில் சேர்ப்பது குறித்த விழிப்புணர்வு திட்டங்கள் என நடந்து கொண்டிருந்தாலும் கூட, தேவையை ஈடுகட்டக்கூடிய அளவிற்கு அவசியமான உள்கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கான பொருத்தமான முயற்சிகள் எதுவும் இல்லை. ஒவ்வொரு கட்டத்திலும் கிடைக்கக்கூடிய போதிய உள்கட்டுமான வசதிகள், பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை இரண்டுக்கும் இடையே வலுவான தொடர்பு இருக்கிறது. ஒன்றாம் வகுப்பில்

சேர்க்கப்படும் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து முடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதில்லை. கல்வி அமைப்பில் ஏழைக் குழந்தைகள் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அவர்களை இந்த அமைப்பிலிருந்தே வெளியே தள்ளுவதாக இருக்கிறது. பள்ளிகளில் இருந்து வெளியேறுகிறவர்கள் என்பவர்கள் உண்மையில் வெளியேற்றப்படுகிறவர்களே.

மேலும், உறுதியான கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு பதிலாக தற்போதைய கட்டுமானங்களையும் நடைமுறைகளையும் வலுப்படுத்துவதற்கு மாறாக, சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலமாக துணைத்திட்டங்கள் என்ற பெயரில் இணை அமைப்புகளையே அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு திட்டத்தின் தரம் எப்படி அமைகிறது என்பது, குறிப்பிட்ட நேரத்தில் திட்டத்திற்கு பொறுப்பாக உள்ள அதிகாரிகளின் முடிவுகளைப் பொறுத்ததாகவே இருக்கிறது. பழைய அதிகாரிகளுக்கு பதிலாக புதிய அதிகாரிகள் வருகிறபோது திட்டம் செயல்படுத்தப்படுவதிலும் மாற்றம் ஏற்படுகிறது. உதாரணமாக, கல்வியின் தரத்திற்கும் ஆசிரியர் பயிற்சியின் தரத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பது என்பதற்கு பதிலாக பள்ளிகளிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் கொண்டுவருதல் அல்லது அதிக வகுப்பறைகளை கட்டுதல் என்பது போன்ற செயல்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக அந்த மாற்றம் நிகழ்கிறது. இவ்வாறாக செயலாக்கப்படும் திட்டங்களை முறையாக நிறுவனப்படுத்தாததன் விளைவாக திட்டங்கள் தொடர்வதில் முட்டுக்கட்டை ஏற்படுகிறது.

## முதல் தலைமுறை மாணாக்கர்கள்:

பள்ளிகள் உள்ளிட்ட நமது கல்விமுறை மொத்தமுமே முதல் தலைமுறையாக கல்வி பயில வருபவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, தனியார் பள்ளிகளுடன் போட்டிப்போட வேண்டும் என்ற வேகத்தில் அரசுப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகள் சீருடை அணிய கட்டாயப்படுத்தப்படுகிறது. சீருடை வாங்க இயலாத குழந்தைகள் பள்ளிக்கு வர அனுமதிக்கப்படுவதில்லை, இவ்வாறாக அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் நடைபெற்ற என்சிபிசிஆர் பொது விசாரணையில், ஒரு குழந்தை தனது சீருடை மழையில் நனைந்துவிட்டதால், சீருடை இல்லாமல் பள்ளிக்குச் செல்ல நேரிட்டது என்பதும், அதற்காக அவளை ஆசிரியர்கள் அவமதித்தபோது, அதை தாங்க முடியாதவளாக அவள் அன்று மாலையே தற்கொலை செய்துகொண்டாள் என்பதும் தெரிய வந்தது. இந்த குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக ஒரு பரபரப்பை ஏற்படுத்துவது அல்ல நமது நோக்கம். சீருடை அணியாததற்காக தண்டிக்கப்படுவது கூட குழந்தையின் மனதில் தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதா வேண்டாமா என்கிற அளவிற்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை சுட்டிக்காட்டுவதே நமது நோக்கம்.

அதேபோல், ஒரு குழந்தையால் பிறப்புச் சான்றிதழையோ, பள்ளி மாறுதல் சான்றிதழையோ தாக்கல் செய்ய முடியாமல் போகிறபோது அதனாலும் கூட பள்ளியை விட்டு நிற்க நேரிடுகிறது. அப்படி நடந்த ஒரு சம்பவத்தில், ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர் குழந்தைக்கு பள்ளி மாறுதல் சான்றிதழ் வழங்கினார். அதில் அவர் நீல நிற மையால் கையெழுத்திட்டு கொடுத்தார். ஆனால், அடுத்தப் பள்ளியில் அந்தச் சான்றிதழை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். தலைமையாசிரியரின் கையெழுத்து பச்சை மையில்தான் இருக்க வேண்டும் என்றார்கள். இந்த பிரச்சனை குறித்து பள்ளி நிர்வாகத்துடன் பேசக்கூடிய சூழல் உருவானபோது, அந்தக் குழந்தை ஓராண்டு பள்ளிப்படிப்பை இழந்து, பள்ளியிலிருந்தும் நிற்கும் நிலை ஏற்பட்டிருந்தது. லட்சக்கணக்கான குழந்தைகள் பிறப்புச் சான்றிதழ் தர முடியாமல் போவதாலேயே பள்ளிகளில் சேர முடியாமல் போகிறது.

## குழந்தைத் தொழிலாளருக்கான சந்தை கிராக்கி:

உண்மையில், ஏராளமான குழந்தைகள் பள்ளிகளுக்கு வெளியே இருக்கிறார்கள் என்பதை சந்தைப் பொருளாதாரம் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது. பள்ளிகளிலிருந்து பாதியில் விலகிய குழந்தைகளுக்கான பாதை ஒட்டுமொத்தமாக மூடப்பட்டு விடுகிறது. குறிப்பாக, முறைசாராத் துறைகளில் உள்ள நிறுவனங்கள் பயிற்சியற்ற தொழிலாளர்களையே நாடுகிற நிலையில் இது மிகத்தீவிரமாக நடக்கிறது. அத்தகைய நிறுவனங்கள் குழந்தைத் தொழிலாளர்களையே நாடுகின்றன. ஏனென்றால் அவர்களுக்கு குறைவான கூலிக் கொடுத்தால்போதும், நீண்ட நேரம் அவர்களை வேலை வாங்கவும் முடியும். நமது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் புலம் பெயர்தல், குழந்தைகள் கடத்தப்படுதல், குழந்தைத் தொழிலாளர் முறை ஆகிய கதைகளை உற்றுக் கவனித்தால் இதை உறுதியாகச் சொல்ல முடியும்.

## முழுநேர முறையான பள்ளிகள்:

குழந்தைகளின் கல்வி உரிமை என்பது பேரத்திற்கு அப்பாற்பட்டது என்று ஆணையம் கருதுகிறது. 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் பள்ளிகளுக்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் முழு நேர முறையான கல்வி வாய்ப்பை பெற வேண்டும், மாறாக ஷிப்ட்டு முறையில் அவர்கள் சேர்க்கப்படக் கூடாது. மகாராஷ்டிரா, தில்லி, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஷிப்ட் முறை பள்ளிகள் உள்ளன. அவற்றில் குழந்தைகள் காலை

8 மணி முதல் பகல் 1 மணி வரை பயில்கிறார்கள். இப்படிப்பட்ட ஷிப்ட் முறை குழந்தைகளின் உரிமைகளை மீறுவதாக இருக்கிறது. ஏனெனில் அது அவர்கள் உழைப்பு சக்தியோடு சேரும்படி தள்ளிவிடுகிறது. கல்வி நீரோட்டத்தில் தொடர முடியாமல் தடுக்கிறது.

**தனியார் பள்ளிகள் வர்த்தக நிறுவனங்கள் போல் செயல்பட ஊக்குவிப்பது சீரான கல்வி வழங்குதல் என்ற கொள்கையையே சீர்குலைக்கிறது. ஏனெனில் பணம் கொடுக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே அது சேவை செய்கிறது.**

ஒவ்வொரு கட்டத்திலும் கல்வி பயில்வதன் தரமும், அதற்காக செய்யப்படும் முதலீடுகளின் தரமும் அதற்கு அடுத்தடுத்த கட்டங்களில் கல்வி பயில்வதன் தரத்தில் பிரதிபலிக்கின்றன. தொடக்கப் பள்ளி நிலையில் கிடைக்கிற பலவீனமான கல்வி, உயர்நிலை மட்டத்திலான கல்வியில் தாக்கம் செலுத்துகிறது. அதேபோல் உயர்மட்டத்தில் உள்ள பலவீனம் தொடக்கக் கல்வியில் பிரதிபலிக்கிறது. இந்த முறையில் கல்வி அமைப்பிற்கு உள்ளேயே கல்விக்கான உரிய முதலீடுகள் செய்யப்படுவது என்பது நடக்காமல் போகிறது. கல்வியின் ஒவ்வொரு கட்டமும் முக்கியமானதுதான். பள்ளிக்கு முந்தைய கல்வி, தொடக்கக் கல்வி இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி கட்டமும் என எல்லாக்கட்டங்களும் முக்கியமானவையே. அந்தந்த காலத்திற்கு ஏற்ற கல்வியை, பள்ளிகளிலிருந்து பாதியில் விலகிய குழந்தைகள் பெறத்தக்க வகையில் உரிய விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

## விற்பனைச் சரக்காகும் கல்வி:

நாட்டில் உள்ள பெரும்பாலான தனியார் பள்ளிகள் மூலதன கோட்பாட்டின் அடிப்படையிலேயே வழிநடத்தப்படுகின்றன. சிறிதாகவோ, பெரிதாகவோ, வெற்றிகரமாகவோ தடுமாறிக்கொண்டோ அவை வர்த்தக நிறுவனங்களாகவே செயல்படுகின்றன. பல பத்தாண்டுகளுக்கு முன்பு குழந்தைகளின் கல்வித்தேவையை நிறைவேற்றுவதற்காக என்றே தொடங்கப்பட்ட அறக்கட்டளைகளாலும் கருணை அமைப்புகளாலும் நடத்தப்படுகின்ற, அரசு நிதி உதவியோடு செயல்படுகின்ற தனியார் பள்ளிகளின் நிலையிலிருந்து இது மாறுபட்ட காட்சியாகும். இன்றைய சந்தை ஏற்பாட்டில், கல்வியை விலை கொடுத்து வாங்கக் கூடிய குழந்தைகளுக்கு மட்டுமே கல்விச் சேவை வழங்கப்படுகிறது. வேறு எந்த ஒரு விற்பனைச் சரக்கையும் போலவே இதுவும் ஒரு திட்டவட்டமான சரக்காக வடிவெடுத்திருக்கிறது. சந்தையில் எப்படி நுகர்வோர் என்போர் தங்களுக்கு கட்டுப்படியாகாத பொருள்களைகூட வாங்கிப்போட நினைக்கிறார்களோ அதேபோல் “பிராண்டு” பெயருள்ள கல்விச் சரக்கை வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் முயல்கிறார்கள். விற்பனைக்கும் விநியோகத்திற்குமான சரக்காக, வாங்க வக்குள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கிற சரக்காக கல்வி மாறிக்கொண்டிருக்கிறது.

தனியார் பள்ளிகள் வர்த்தக நிறுவனங்கள் போல் செயல்பட ஊக்குவிப்பது சீரான கல்வி வழங்குதல் என்ற கொள்கையையே சீர்குலைக்கிறது. ஏனெனில் பணம் கொடுக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே அது சேவை செய்கிறது. ஆகவே, வழியற்றவர்களும் ஓரங்கட்டபட்டவர்களும் அவர்களாகவே கல்விக் கட்டமைப்பிலிருந்து வெளியே இருக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதை முறைப்படுத்த தவறினால் அதிக முதலீட்டில் சப்ளை செய்ய ஏழை குழந்தைகள் மேலும் மேலும் வெளியே இருக்கும் நிலையையே உருவாக்குவார்கள். அதன் மூலம் நாட்டின் வர்க்க வேறுபாடுகள் திட்டவட்டமானதாக ஆக்கப்படும். பணக்காரர்களும் ஏழைகளும் ஒருபோதும் சந்தித்துக் கொள்ள முடியாது. அவர்களுக்கு இடையேயான இடைவெளி மேலும் மேலும் அதிகரிக்கவே செய்யும். இது ஒரு மறைமுக இன ஒதுக்கல் முறையாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கும். அனைவருக்குமான கொள்கைகள், சமத்துவத்தை வளர்த்தல், சமூக நீதியை வளர்த்தல், அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயகத்தை கட்டமைத்தல் என்ற பள்ளிகளுக்கான அடிப்படை கோட்பாட்டையே இது அப்பட்டமாக மீறுகிறது.

## அருகாமைப் பள்ளிகள்:

இந்தப் பின்னணியில்தான் அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயகம் என்பதற்கான சூழலை உருவாக்குவதிலிருந்து பிரிக்க முடியாத அமைப்புகளாகவும் குடிமக்களின் திறன்களை வளர்ப்பதற்கான அமைப்புகளாகவும் கல்வி நிறுவனங்கள் செயல்படுவது என்பது முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைகள் அவரவர் வட்டாரத்திலேயே உள்ள பள்ளிகளில் சேர்வது, அனைத்து அருகாமைப் பள்ளிகளிலும் சமமான தரம் பராமரிக்கப்படுவது ஆகியவை உறுதிப்படுத்தப்படும் சூழலில், குடிமக்கள் தன்மை என்பது உருவாக்கப்படுகிறது. அத்தகைய சூழலில் அவர்கள் வெறும் நுகர்வோராக இருக்கமாட்டார்கள். மற்றவர்களோடு சேர்ந்து, வர்க்க வேறுபாடுகளின்றி அருகாமைப் பள்ளிகளில் படிக்கிற வாய்ப்பு என்பது குழந்தைகளை ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஆக்கப்பூர்வமாக சிந்திப்பதற்கும் அறிவைத் தேடவும் அவர்களை ஊக்குவிக்கிறது.

குழந்தைகள் தங்களது உடனடி சூழல்களிலிருந்து விலகி, பறந்த சமுதாயத்தாலும் அதன் நுட்பமான

தொடர்பான சில அங்கீகாரங்களைத் தவிர்த்து குழந்தைகளுக்கான புதிய திட்டமோ, கூடுதல் நிதி ஒதுக்கீடுகளோ எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை. இரண்டாவதாக, 18 வயதுக்குக் குறைவான 45 கோடி குழந்தைகள் உள்பட, ஒவ்வொரு இந்தியரின் தலையிலும் புதிதாக ரூ.3,500 கடன் சுமையை இந்த பட்ஜெட் ஏற்றுகிறது, அந்தச் சுமை அதிகரித்துக்கொண்டே போகிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக குழந்தைகளின் உரிமை என்ற கண்ணோட்டத்தில் மத்திய மாநில அரசுகளின் பட்ஜெட்டுகளை ஆராய்ந்து வருகிற எச்ஏக்யூ: குழந்தை உரிமைகள் மையம், நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் நாட்டின் குழந்தைகளுக்காக ரூ.43,104.16 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என மதிப்பிடுகிறது. **வேறு வார்த்தைகளில் சொல்வதானால், 2009–10 பட்ஜெட்டில் மொத்த செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.10.20 லட்சம் கோடியில், குழந்தைகளுக்கான பல்வேறு திட்டங்களுக்காக என ஒதுக்கப்பட்டிருப்பது வெறும் 4.21 சதவீதம்தான். கடந்த நான்கு ஆண்டுகளின் பட்ஜெட் நிதிகளில், குழந்தைகளுக்கு மிகக் குறைவாகப் பங்களிக்கப்பட்டிருப்பது இப்போதுதான்.** அட்டவணை–1 காட்டுவது போல், இதற்கு முன் குறைவாக ஒதுக்கப்பட்டது 2005–06ல்தான். அப்போது குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட 3.85 சதவீத நிதி ஒதுக்கப்பட்டது. இது 2008–09ல் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட 5.31 சதவீத பட்ஜெட் மதிப்பீடு நிதியை விட, மறுமதிப்பீட்டில் 4.31 சதவீதமாகக் குறைந்த நிதியை விட மிகக் குறைவானதாகும்.

**உண்மையில், மத்திய நிதி அமைச்சகத்தால் குழந்தைகள் நலனுக்கான திட்ட பட்ஜெட் ஒதுக்கீடு என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள, 2009–10 பட்ஜெட் செலவின ஆவணம் தொடர்பான 22வது அறிக்கையை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வோமானால், இந்த பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு மேலும் குறைவாகவே – 3.88 சதவீதமாகவே – இருக்கிறது.** குழந்தைகளுக்கான பட்ஜெட் அறிக்கை என்பதை கடந்த நிதியாண்டில் தொடங்கிவைத்தவர் அன்றைய நிதியமைச்சர் ப. சிதம்பரம். இந்த ஆண்டுக்கான அறிக்கையில், பல திட்டங்கள் கைவிடப்பட்டிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இவ்வாறு கைவிடப்பட்டிருப்பதற்கான காரணம், துறை சார்ந்த மெத்தனப் போக்காக இருக்கலாம். ஆகவே, குழந்தைகளுக்கான பங்கு எச்ஏக்யூ மதிப்பீட்டை விடவும்

# இந்தியாவின் குழந்தைகளுக்கு... குறைந்த நிதி ஒதுக்கீடு, மிகுந்த கடன் சுமை மத்திய பட்ஜெட் 2009 –10 (ஒரு பார்வை)

குறைவேயாகும்.

**பல்வேறு பிரிவுகளில் குறைக்கப்பட்ட ஒதுக்கீடுகள்: வெளித்தோற்றத்திற்கு சாமான்ய மக்களின் (ஆம் ஆத்மி) வாழ்க்கையை இலகுவாக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டிருப்பது போலத் தெரிகிற, வரலாற்றிலேயே மிகப்பெரிய இந்த பட்ஜெட்டில், இந்த நாட்டின் அரசு தனது மக்களில் 44 சதவீதமாக இருக்கிற குழந்தைகளை மறந்துவிட்டது. அட்டவணை – 2 பல்வேறு பிரிவுகளில் குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு உரிய பங்கு குறைந்துவிட்டதைக் காட்டுகிறது. சுகாதாரத்தில் மட்டுமே சிறிது அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நம் குழந்தைகள் இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்தப்படுவது தொடரத்தான் வேண்டுமா ?**

**கல்வி**

புதிய திட்டங்களுக்கு மட்டுமாக ரூ.3084.98 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் கூட, கடந்த நிதியாண்டில் 3.84 சதவீதமாக இருந்த கல்விக்கான நிதி ஒதுக்கீடு இந்த பட்ஜெட்டில் 3.03 சதவீதமாக சரிவடைந்திருக்கிறது. சில திட்டங்கள் கைவிடப்பட்டதாலும், சில திட்டங்கள் வேறு திட்டங்களோடு இணைக்கப்பட்டதாலும் இவ்வாறு நடந்திருக்கிறது. உதாரணமாக, 2008–09 பட்ஜெட்டில் **புதிய மாதிரிப் பள்ளிகள்** என்ற திட்டத்திற்காக ரூ.650 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த பட்ஜெட்டில் அதற்கான ஒதுக்கீட்டைக் காணோம். மாறாக, **சிறப்பாகச் செயல்படுவதற்கான அடையாளமாக, வட்டார அளவில் 6,000 மாதிரிப் பள்ளிகள் அமைத்தல்** என்ற தலைப்பில் ரூ.350 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடுநிலைப் பள்ளி மட்டத்தில் சீரான வாய்ப்பு மற்றும் தரமான கல்வி என்ற திட்டத்திற்கும் (SUCCESS) கூட

**அட்டவணை 1 : 2009–10ம் ஆண்டின் குழந்தைகள் பட்ஜெட்: பட்ஜெட் செலவினங்களில் குழந்தைகள் நல திட்டங்களுக்கான பங்கு**

| | 2004–05 | | 2005–06 | | 2006–07 | | 2007–08 | | 2008–09 | | 2009–10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திட்டங்களும் செயல்களும் | ப.ம. | ம.ம. | ப.ம | ம.ம | ப.ம | ம.ம | ப.ம. | ம.ம. | ப.ம. | ம.ம. | ப.ம. |
| மத்திய பட்ஜெட்டில் குழந்தை களுக்கான ஒதுக்கீடு (சதவீதத்தில்) | 2.44 | 2.48 | 3.85 | 4.14 | 4.90 | 4.67 | 4.87 | 4.43 | 5.31 | 4.31 | 4.21 |
| மொத்த பட்ஜெட் (கோடி ரூபாய்களில்) | 4,77,8 29.04 | 5,05,79 1.41 | 5,14,343.8 | 5,08705.4 | 5,63,991.1 | 5,81,637 .04 | 6,80,52 0.51 | 7,09,37 3.26 | 7,50,88 3.53 | 9,00,95 3.41 | 10,20,837. 68 |

நிதி ஒதுக்கப்படவில்லை. 2008–09 பட்ஜெட்டில் இதற்கு ரூ.2,185 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

இதே போல், 1974ல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு பொதுப்பள்ளிகளில் கல்வி வாய்ப்பு அளிப்பதற்காக என மத்திய நிதி உதவியுடன், ஒருங்கிணைந்த ஊனமுற்ற குழந்தைகள் கல்வித் திட்டம் (IEDC) கொண்டுவரப்பட்டது. அது, நடுநிலைப் பள்ளிகளில் ஊனமுற்றோரை உள்ளடக்கிய கல்வி (IEDSS) என நடுநிலைப் பள்ளி மட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ.70 கோடி, 2009–10 பட்ஜெட்டில் மாற்றப்பட்டுள்ளது. **அப்படியானால், தொடக்கப்பள்ளி மட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஊனமுற்ற குழந்தைகளே இல்லை என்று அர்த்தமா ?**

இறுதியாக, தேசிய மத்திய கல்வித் திட்டம் (ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான் -RMSA) என்பதற்கு ஒரு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2007ல் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு 2009 ஜனவரியில் தான் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், (6 முதல் 14 வயது வரை உள்ள

குழந்தைகளுக்கான) எல்லோருக்கும் கல்வி திட்டம் (சர்வ சிக்ஷா அபியான் – SSA), மதிய உணவுத் திட்டம் ஆகிய நல்ல எடுத்துக்காட்டான திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் எந்த மாற்றமும் இல்லை. அரசாங்கம் 15–16 வயதுப் பிரிவினரை 6–14 வயதுப் பிரிவினரிலிருந்து வேறுபட்ட பிரிவினராக நடத்துவது போல் தெரிகிறது. குழந்தைகளைப் படிப்பை நிறுத்திக்கொள்ள வைக்காத, தொடர்ச்சியான, தரமான கல்வி என்பது இல்லாமல் நடுநிலைக் கல்வி என்பது சாத்தியமல்ல என்பதை

## அட்டவணை 2 : மத்திய பட்ஜெட் சதவீத அடிப்படையில் குழந்தைகளுக்கான பட்ஜெட்டில் பிரிவு வாரி ஒதுக்கீடு

| குழந்தைகளுக்கான பட்ஜெட் பிரிவுகள் | சதவீதத்தில் | |
|---|---|---|
| | 2008–09 | 2009–10 |
| மத்திய பட்ஜெட்டின் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டில் மேம்பாட்டுப் பிரிவு பங்கு | 0.87 | 0.69 |
| மத்திய பட்ஜெட்டின் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டில் சுகாதாரப் பிரிவு பங்கு | 0.24 | 0.46 |
| மத்திய பட்ஜெட்டின் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டில் பாதுகாப்பு பிரிவு | 0.06 | 0.02 |
| மத்திய பட்ஜெட்டின் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டில் கல்விப் பிரிவு | 3.84 | 3.03 |
| மத்திய பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான பங்கு | 5.31 | 4.21 |
| ஆதாரம்: செலவின பட்ஜெட், பாகம் 2, 2008–09 ~ 2009–10 | | |

சிந்தித்துப்பார்க்கவும் அரசாங்கத்திற்கு நேரம் இல்லை.

மாறாக, உயர் கல்வித் திட்டங்களுக்கும், தொழில்பயிற்சி சார்ந்த கல்வித் திட்டங்களுக்கும்தான் இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு குழந்தைகளுக்கு இலவசமான கட்டாயக் கல்வி பெறும் உரிமை சட்டமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிற நிலையில், இவ்வாறு உயர் கல்வித் திட்டங்களுக்கும், தொழில்பயிற்சி சார்ந்த கல்வித் திட்டங்களுக்கும்தான் இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது, நம் அரசியல்வாதிகள் அவர்கள் வாக்களித்திருக்கிற 1

கோடியே 20 லட்சம் வேலை வாய்ப்புகளுக்கான ஊழியர்களைத் தயார் செய்வதற்குத்தான் விரும்புகிறார்களேயன்றி, பள்ளிகளில் அந்தக் குழந்தைகளுக்கு உண்மையான கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அக்கறை இல்லை என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது. இந்தியாவின் குழந்தைகளுக்கு உண்மையான கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அக்கறை நம் அரசியல்வாதிகளுக்கு இல்லை என்கிறபோது, RMSA திட்டத்திற்கு SSA திட்டத்தின் கதிதான் ஏற்படும் என்ற கணிப்புக்கு எளிதாக வரலாம்.

## Rfhjhu«

குழந்தைகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு கடந்த ஆண்டை விட கொஞ்சமாவது அதிகரித்திருக்கிறது என்றால் அது சுகாதாரத் துறையில் மட்டும்தான். தேசிய ஊரக சுகாதார இலக்குத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 16.16 சதவீதம் அதிகரிக்கப்பட்டதால் இவ்வாறு நடந்திருக்கிறது. **இதில் மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 25.7 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதும் அடங்கும்** (குழந்தைகளுக்கான பட்ஜெட் மதிப்பீட்டில் தேசிய ஊரக சுகாதார இலக்கு திட்டத்தை எச்ஏக்யூ கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.) எனினும், 2008–09ம் ஆண்டுக்குரிய பொருளாதார ஆய்வறிக்கையில் அரசாங்கமே, கடந்த ஆண்டுகளில் சுகாதார கவனிப்பின் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் கூட இன்னும் செய்ய வேண்டியது ஏராளமாக இருக்கிறது என ஒப்புக் கொண்டுள்ளது.

## மேம்பாடு

இந்தத் துறையில் ஒரு முன்னோடித் திட்டமாக, சர்ச்சைக்கு உரியதாகவும் அதே நேரத்தில் அவசியமானதாகவும் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்கு (ICDS) ஒட்டுமொத்த ஒதுக்கீடாகிய ரூ.6,026.30 கோடியில் வெறும் 8.28 சதவீத ஒதுக்கீடுதான் செய்யப்பட்டுள்ளது. **சிறு குழந்தைகளின் ஊட்டச்சத்து மேம்பாடு என்பதற்கு அரசாங்கம் இனியும் எந்த முன்னுரிமையும் அளிக்க தயாராக இல்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில் ICDS திட்டத்தை பரவலாக்குவது என்ற இலக்கு 2012ம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது 2008 டிசம்பர் மாதத்திற்குள் இதைச் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் நிர்ணயித்த கெடுவை தாண்டுகிறது. மேலும் 2004ம் ஆண்டின் தேசிய குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 2009ம் ஆண்டு என்ற கெடுவையும் தாண்டுகிறது.** மத்திய பட்ஜெட்டில் மேம்பாட்டுத் துறைகளுக்கான பங்கு 2008–09ம் ஆண்டின் 0.87 சதவீதமாக இருந்தது தற்போது 0.69 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருப்பதில் வியப்பில்லை.

## பாதுகாப்பு

எச்ஏக்யூ போன்ற குழந்தை உரிமை அமைப்புகள் தொடர்ந்து வற்புறுத்தியதன் பலனாக, நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் (ICPS) இந்த மார்ச் மாதம் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இது கொண்டுவரப்பட்ட முதல் ஆண்டிலேயே இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் அளவு, இதனை செயல்படுத்துவதில் அரசுக்கு எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறது என்ற வினாவை எழுப்புகிறது. தேசிய அளவில் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு முழுமையான திட்டம்தான் ICPS தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரே குடையின் கீழ் செயல்படுத்தும் தனித்துவமான திட்டமாக இது உருவாக்கப்பட்டது. கடந்த நிதியாண்டில் இதற்கு ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் வடகிழக்கு மாநிலங்களுக்காக என ஒதுக்கப்பட்ட ரூ. 20 கோடியும் உள்ளடங்கும். ஆனால், இப்போது வடகிழக்கு மாநிலங்களுக்கான ரூ. 6 கோடி உள்பட இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 60 கோடியாக கீழிறங்கிவிட்டது. குழந்தை / பெண் தொழிலாளர்களுக்கான வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு 42 சதவீதம் குறைக்கப்பட்டு, 2009 – 10ம் ஆண்டில் ரூ. 90 கோடி அளவிற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு என்பதை அரசு கைவிட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. இதன் விளைவாக, பட்ஜெட் நிதி ஆதாரத்தில் குழந்தைகள் பாதுகாப்புக்காக என ஒதுக்கப்பட்டுள்ள நிதி மிக மிக அற்பமானதாக சுருங்கிவிட்டது. **நடப்பு பட்ஜெட்டில் செலவிடப்படும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாயிலும் குழந்தைகள் பாதுகாப்புக்கு என செல்வது வெறும் 2 காசுகள் மட்டுமே.**

## வாக்குறுதியாகவே தொடரும் உணவுப் பாதுகாப்பு

2008 – 09ம் ஆண்டின் பட்ஜெட் செலவினங்களோடு ஒப்பிடுகையில், 36 சதவீதம் வரை பெருமளவிற்கு விவசாயம் மற்றும் உள்கட்டுமானத்திற்கான பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறை செலவினங்களில் 25 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றில் குழந்தைகளுக்கு பலனளிக்கக் கூடியதாக இரண்டே இரண்டு திட்டங்கள்தான் உள்ளன. தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்படும் என்ற வாக்குறுதி, இதன் கீழ் ஒவ்வொரு மாதமும் கிலோ ரூ.3 விலையில் 25 கிலோ வரை அரிசி அல்லது கோதுமை வழங்கப்படும். மற்றொன்று, ரூ. 350 கோடி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட சுகாதார காப்பீட்டுத் திட்டமாகும். இந்த இரண்டே மிக ஏழ்மை நிலையில் உள்ள

குடும்பங்களுக்காக உள்ள கொண்டுவரப்பட்டவை ஆகும். 18 மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் 46 லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு, இந்தத் திட்டத்திற்காக என பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் தமது பட்ஜெட் உரையில் கூறினார். ஆனால், குறைந்த விலையில் உணவு தானியம் என்பது ஒரு வாக்குறுதியாகவே தொடர்கிறது. **இதற்கு ஆகக்கூடிய மிகப்பெரும் செலவினத்திற்கு என பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவே, இந்தத் திட்டம் உண்மையாகவே செயல்படுத்தப்படுகிறபோது, பின்னர் மக்களின் கடன் சுமையை அதிகரிப்பதாகவே இது முடியும் என நாம் ஊகிக்கலாம்.**

மேலும், குழந்தைகள் உள்பட குடும்பங்களுக்கு இந்த குறைந்த விலை தானியங்கள் போன்ற திட்டங்களால் உண்மையிலேயே பலன் கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை. ஆராய்ச்சிகளிலும், மாதிரி ஆய்வுகளிலும், கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் கிடைக்கிற ஆதாரங்கள் இதற்கு நேர்மாறான தகவல்களையே அளிக்கின்றன. 2008 – 09ம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை, “ அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்படுகிற பொதுத்துறை சார்ந்த பொருள்களும், பகுதி பொதுத்துறை (குவாசி பப்ளிக்) சார்ந்த பொருள்களும் சேவைகளும் இன்னும் பெரிய அளவுக்கு மேம்பாடு தேவை என்பதையே காட்டுகின்றன. திட்டங்களில் இப்போதும் பல கசிவுகள் உள்ளன. திட்டங்களின் பலன்கள் யாரை இலக்கு வைத்து இந்தத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டனவோ அந்த மக்களையே இன்னமும் சென்றடையவில்லை,'' என்று சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அடித்தளமட்டத்தில் மிக மிக குறைவாக செலவிடப்படுகின்றன என்பதை எச்ஏக்யூ ஆய்வுகள் எடுத்துக்காட்டி உள்ளன. இதற்கு முக்கிய காரணம் தவறான திட்டமும், அரசின் அக்கறையின்மையும், முறைகேடாக நிதி கையாளப்படுவதுமே ஆகும்.

**தலைமுறைச் சுமை**

தற்போதைய மந்தபோக்கை மாற்ற கூடுதலாக செலவிடுவது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இருந்தபோதிலும் அரசின் திட்டத்தால் தேவையற்ற பக்க விளைவுகள் ஏற்படக்கூடும். வரி வருவாய் அதிகரிப்பு என்பது மிக குறைவாகவே இருக்கும் என்பதால் இந்த நிதிக்குத் தேவையான பெரும் பணத்தை கடனாகவே பெற வேண்டியிருக்கும். எனவே 2 ஆண்டுகளில் கடனுக்கான வட்டி 31.85 சதவீதமாக எகிறிவிடும். 2007 – 08ம் ஆண்டின் உண்மை மதிப்பீட்டோடு ஒப்பிடுகையில் 2009 – 10ம் ஆண்டு பட்ஜெட்டில் இந்த வட்டித் தொகை 2,25,511 கோடியாக அதிகரித்திருக்கிறது. இது மேலும் அதிகமாக இருக்கக் கூடும். ஏனென்றால் நிதிப்பற்றாக்குறை என்பது அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. நடப்பு நிதியாண்டில் அரசாங்கம் திட்டத்திற்கான பெரும் செலவை சந்திப்பதற்காக புதிய கடன்களைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1991ல் தாராளமயமாக்கல் தொடங்கிய பிறகு பெறப்படுகிற கடன்களில் இதுவே மிக அதிகமாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதம் என்ற அடிப்படையில், 2007 – 08ம் ஆண்டின் உண்மை மதிப்பீடு 2.7 சதவீதமாக இருந்த நிதிப்பற்றாக்குறை என்பது தற்போது ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளது. தொகை அடிப்படையில் பார்த்தால் இந்தப் பற்றாக்குறை இதே காலகட்டத்தில் 2 மடங்கிற்கும் அதிகமாக ரூ. 4,00,996 கோடியாக அதிகரித்திருக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறை குறைவாகவே அதிகரித்திருப்பதுபோல் தெரிவதற்கு காரணம் கடந்த ஆண்டு ஏற்பட்ட உலக நிதி நெருக்கடியாகும். 2008 – 09ம் ஆண்டில் இது 6.7 சதவீதம் அளவுக்கு கீழிறங்கியது. அதற்கு முந்தைய 5 ஆண்டுகளில் இது சராசரியாக 9 சதவீத அளவில் இருந்து வந்தது. இந்த கடன்களால் குவிகிற வட்டிச் சுமையை எதிர்காலத்தில் இந்தியாவின் குழந்தைகள்தான் சுமக்க வேண்டியிருக்கும். இதனால் ஏற்படக்கூடிய விலைவாசி உயர்வு, கடனுக்கான வட்டி அதிகரிப்பு போன்ற சுமைகளையும் குழந்தைகள்தான் சுமக்க வேண்டியிருக்கும். ஆகவேதான் இந்த அதிக கடனையும் நிதிப்பற்றாக்குறையையும் **“ஒரு தலைமுறைச் சுமை”** என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

HAQ: குழந்தை உரிமைகள் மையம்
208 ஷாபுர் ஜாட், புதுதில்லி – 110049 தொலைபேசி 91–11–26490136
ஃபேக்ஸ்: 91–11–26492551 இ–மெயில்: info@haqcrc.org
ஆய்வு அறிக்கை: பரோமிதா சாஸ்திரி, மதுமிதா புரகாயஸ்தா, இந்தாரிலின் திகார்

# அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலும் கட்டாய நன்கொடை வசூல்

பெரும்பாலான அரசு மற்றும் நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையின் போது, கட்டாய வசூல் வேட்டை நடந்து வருகிறது. நடப்பாண்டில் கல்வித்துறை அலுவலர்கள் கட்டாய நன்கொடை குறித்து எதுவும் அறிவிக்காததால், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பகிரங்க வசூல் வேட்டையில் இறங்கியுள்ளனர். பள்ளியின் நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் மாணவ, மாணவியரின் பெற்றோரை பங்கு பெற விடாமல், அப்பகுதி கட்சி நிர்வாகிகள் ஆக்கிரமித்து விடுகின்றனர். பள்ளியில் சேர வரும் மாணவர்களிடம் கட்டாய நன்கொடை கேட்டு, வற்புறுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டில் தமிழக அரசு இது குறித்த புகார் எழும் முன்பே, பள்ளிகளில் நன்கொடை வசூல் நடத்தக்கூடாது என கடும் எச்சரிக்கை விடுத்தது. கல்வித்துறை அலுவலர்கள் மூலம் தொடர்ந்து தலைமை ஆசிரியர்கள் எச்சரிக்கப்பட்டதால், நன்கொடை குறித்த புகார் குறைந்தது. இதற்கேற்ப மாணவர்களின் கல்விக்கட்டணம், தேர்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் தமிழக அரசு ரத்து செய்தது. தற்போது, கல்வியாண்டு துவங்கிய நிலையில், அனைத்து பள்ளிகளிலும் ஆறாம் வகுப்பு மற்றும் பிளஸ் 1 வகுப்புகளில் மாணவர் சேர்க்கை துவங்கியுள்ளது. பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள் பெரும்பாலான பள்ளிகளை ஆக்கிரமித்து, கட்டாய நன்கொடை வசூலில் இறங்கியுள்ளனர். தமிழக அரசும், கல்வித்துறை அலுவலர்களும் கட்டாய நன்கொடை குறித்து நடப்பாண்டில் எவ்வித அறிவிப்பும் இதுவரை வெளியிடவில்லை. இவற்றை சாதகமாக வைத்துக் கொண்டு, நன்கொடை தந்தால் மட்டுமே மாணவர் சேர்க்கை என்ற ரீதியில் பெற்றோரை மிரட்டி 500 ரூபாய் வரை நன்கொடை வசூலித்து வருகின்றனர். அதிலும், பிளஸ் 1 சேரும் மாணவர்களிடம் 2,000 ரூபாய் வரை நன்கொடை தர வற்புறுத்துகின்றனர். கேட்கும் நன்கொடை வழங்கினால் மட்டுமே, மாணவர்கள் விரும்பும் பிரிவில் சேர முடியும் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. இதற்கு பள்ளி தலைமை ஆசிரியர்களும் உடந்தையாக இருந்து வருகின்றனர். பள்ளியின் நிர்வாக செலவு முதல் மாணவர்களின் கட்டணம் வரை அனைத்து செலவுகளையும், தமிழக அரசு ஏற்றபின்பும், அரசு பள்ளிகளில் நடக்கும் கட்டாய வசூல் பெற்றோரிடையே கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

### இது குறித்து பெற்றோர் சிலர் கூறியதாவது:

அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நடத்தும் இடங்களில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தை சேர்ந்தவர்கள் எனக்கூறிக்கொண்டு, கட்சிப்பிரமுகர்களே அமர்ந்துள்ளனர். கட்டாயமாக நன்கொடை வழங்கினால் மட்டுமே பள்ளியில் சேர்க்க முடியும் என கண்டிப்பாக கூறுகின்றனர். எதற்காக நன்கொடை செலுத்த வேண்டும் என கேட்டால், 'பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஆசிரியர் நியமிக்கப்பட்டு, சம்பளம் வழங்கிறோம்' என காரணமும் கூறுகின்றனர். இதனால் ஏழை மாணவ, மாணவியரின் பெற்றோர் என்ன செய்வதென தெரியாமல் திகைத்து நிற்கின்றனர். கல்வித்துறை அலுவலர்களும் இது குறித்த கண்காணிப்பும், அறிவுறுத்தலும் தராததால், தங்களது வசூல் வேட்டையை பகிரங்கமாகவே நடத்தி வருகின்றனர். உதவி பெறும் பள்ளிகளில் வழக்கமாகவே கட்டணம் என ஆயிரம் முதல் மூவாயிரம் வரை தனியார் பள்ளிகளை போன்று பணம் வசூலித்து வருகின்றனர். இது குறித்து பல புகார்கள் அனுப்பப்பட்டும் கல்வித்துறை நடவடிக்கை எடுக்காததால், இவர்களின் வசூலும் தற்போது அதிகரித்துள்ளது. கல்வித்துறை அதிரடி நடவடிக்கை எடுத்து, இவற்றை நிறுத்தாவிட்டால், பள்ளியில் இடைநிற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

### ரூ.2 லட்சம் பணம் பறிமுதல்

மண்ணச்சநல்லூர் அரசுப் பள்ளியில் மாணவர்களிடம் சேர்க்கைக்கு கட்டாய வசூலில் ஈடுபட்ட ஆசிரியர்களிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தினர். அவர்களிடமிருந்து இரண்டு லட்ச ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. திருச்சி மண்ணச்சநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை மாணவ–மாணவியர் சேர்க்கைக்காக கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்குத் தகவல் வந்தது. லஞ்ச ஒழிப்பு உதவிக் கமிஷனர் அம்பிகாபதி தலைமையில் சென்ற போலீசார், பள்ளியில் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டனர். பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மாணவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். தமிழ் வழியிலான சேர்க்கைக்கு, ஆறாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை 3,500 ரூபாயும், ஆங்கில வழிச் சேர்க்கைக்கு 5,000 ரூபாயும் கட்டாய வசூல் செய்து வந்தது தெரியவந்தது. மேலும், கணக்கில் இல்லாத இரண்டு லட்ச ரூபாய் அங்கிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதைப் போலீசார் பறிமுதல் செய்தனர். லஞ்ச ஒழிப்பு போலீசார், தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

– தினமலர், 10.6.09

# தமிழக சட்டமன்ற நடப்புக்கூட்டத் தொடரில் பள்ளிக்கல்வி தொடர்பாக எழுப்பப்பட வேண்டிய முக்கியப் பிரச்சினைகள்

1. தமிழ்நாட்டில் கல்வி அளிப்பு மாணவரது சமூக, பொருளாதார வேறுபாடுகளுக்கேற்ப பெரும் ஏற்ற தாழ்வுகளும் பாகுபாடுகளும் நிரம்பப்பெற்றதாக உள்ளது. இதனால் வேலைவாய்ப்புகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. வசதி நிறைந்த நாடுகளிலும் கூட இத்தகைய வேறுபாட்டை கல்வி அளிப்பில் காணமுடியாது. பெரும்பான்மையான மக்கள் தரமான கல்வி மறுக்கப்படுவதால் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பங்கு கொள்ள இயலாதவர்களாக இருக்கின்றனர். இது நாட்டிற்கே நல்லதல்ல. இந்நிலையை மாற்றிட அனைவர்க்கும் சமமான, தரமான கல்வியை இலவசமாக அருகாமைப் பள்ளி முறையில் பொதுப்பள்ளித் திட்டத்தின் மூலம் அரசே அளிக்கவேண்டும்.

2. இன்றைய ஆளும் கட்சியான தி.மு.க தனது தேர்தல் அறிக்கையில் சமச்சீர் கல்வி முறையினை செயல்படுத்துவோம் என்று உறுதி அளித்தது. அதனை நடைமுறைப்படுத்த கருத்துரை வழங்கிட அமைக்கப்பட்ட குழுவும் தனது அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஏப்ரல் 2007–யில் அளித்தது. ஆனால் அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்காது பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் முறைகளைக் கண்டு அரிய ஐவர் குழு அமைத்துள்ளது சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கைவிடவே என்று மக்கள் கருதுகின்றனர். வேறு எந்த மாநிலத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட கல்வி முறைகள் சி.பி.எஸ்.ஈ திட்டம் தவிர மாநில அரசுகள் வழங்குவதில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. எளிய மக்களின் வாழ்வில் வசந்தம் வீசிட உடனடியாக சமச்சீர் கல்வி முறையை செயல்படுத்த வேண்டும்.

3. பல பள்ளிகள் கட்டாய நன்கொடை வசூலித்தும், கட்டணங்களை உயர்த்தியும் வருகின்றன. கல்வி அளிப்பு ஒரு சேவை என்பதற்கு மாறாக அது ஒரு வாணிகம் என்ற நிலை ஏற்பட்டுவருவது விரும்பதக்கதல்ல, முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியது. நன்கொடையைத் தடை செய்ய சட்டம் ஒன்று இச்சட்டமன்றத் தொடரிலேயே கொண்டுவரப்படுமென்ற மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் சட்ட மன்றத்தில் உறுதி அளித்திருப்பது வரவேற்பதற்குரியது. நிறைவேற்றப்படும் சட்டம் குறைகளின்றி சி.பி.எஸ்.ஈ பள்ளிகள் உள்ளிட்ட மாநிலத்தில் செயல்படும் எல்லாப் பள்ளிகளுக்கும் பள்ளி முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் அமைய வேண்டும்.

4. தமிழ் நாட்டில் பல பள்ளிகள் மூடப்பட்டுவருவது மிக்க வேதனைக்குரியது. சென்னை மாநகராட்சியில் மட்டும் இவ்வாண்டில் 30 பள்ளிகள் செயல்படாது என்பதால் பல இளஞ்சிறார்களுக்கும் வீட்டிற்கருகில் படிக்கும் வாய்ப்பினை இழக்கச் செய்யும். இது போலவே தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் ஏராளமான பள்ளிகள் மூடப்பட்டும் மூடுவதற்கு ஆணை இடும் தருவாயிலும் இருப்பதாக அறிகின்றோம். ஏழை எளியவர் கல்வி மறுப்பிற்கு உள்ளாகின்றனர். இதற்குக் கூறப்படும் எக்காரணமும் ஏற்புடையதல்ல. தனியார் பள்ளிகள் வளர்ச்சிக்காகப் பொதுப் பள்ளிகளை முடக்குவது என்ற பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் தவறான கொள்கையின் விளைவே இது என்பது தெளிவு. ஆங்கிலவழித் தனியார் பள்ளிகளுக்கு இனி அனுமதி வழங்கக்கூடாது. கல்வி அளிப்பை முழுமையாக அரசே ஏற்பது தான் உறுதியானதும், இறுதியானதுமான தீர்வாகும்.

5. செயல்வழிக் கற்றல், ஆசிரியரின் ஆங்கிலத்திறனை வளர்த்தல், கணிதக் கூடம் அமைத்தல் போன்ற பல நல்ல திட்டங்கள் தொடங்கப்பெற்றிருப்பதை உளமார வரவேற்கின்றோம். ஆனால் இவற்றின் பயன்கள் முழுமையாக மாணவர்களைச் சென்று அடைய தேவைக்கேற்ப போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பள்ளிக் கல்வியின் தொய்விற்கு மூல காரணம் ஆசிரியர்கள் பற்றாக்குறையே. பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் ஐந்து வகுப்பிற்கு 2 ஆசிரியர்களே உள்ளனர். நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் ஆசிரியர்கள் பணியிடங்கள் உருவாக்கப்படாமலும், காலியிடங்கள் நிரப்பப்படாமலும் உள்ளன. பல பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாதிருப்பதும் சர்வ சாதாரணமாக இருக்கின்றது. ஆசிரியர் – மாணவர் விகிதம் என்பது ஒரு மாயை. பள்ளி நிலையை அறிய உதவாது. இந்த அவல நிலையைப் பிரிவிற்கு ஒரு ஆசிரியர் என்று பணியிடங்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

6. பல ஆண்டுகளாக அரசு ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தாததால் பெற்றோர் – ஆசிரியர் சங்கங்கள் தாமாக மாணவர் நலன் கருதி ஆசிரியர்களை நியமித்து வரும் நடைமுறை பின்பற்றப்பட்டு இன்று ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்தில் எவ்வித பணிப்பாதுகாப்புமின்றி சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு ஊதியம் வழங்கவும் பள்ளியின் உட்கட்டமைப்பு

வசதிகளைப் பெருக்கவும் மற்றும் பள்ளியின் அன்றாட நடைமுறைச் செலவுகளுக்காகவும் பெற்றோர், மாணவரிடமிருந்து நன்கொடை பெற்று வருவது அரசு உட்பட அனைவரும் அறிந்ததே. நன்கொடைக்கு எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலித்ததும் அரசு நன்கொடை வசூலைத் தடை செய்துள்ளது. இத்தடை வரவேற்கத்தக்கதெனினும் மாணவர் கல்விக்கு மாற்று ஏற்பாடு செய்யாது எடுக்கப்பட்ட நடவடிக்கையால் பெ.ஆ.ச நியமன ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்க இயலாது பலரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களில் பலர் பல ஆண்டுகளாகப் பணிபுரிபவர். மாணவரது கல்வியில் இழப்பு ஏற்படாதிருக்க பெ.ஆ.ச ஆசிரியர்களை மறு நியமனம் செய்து அவர்கள் ஊதியத்தை அரசே வழங்க வேண்டும். அரசின் தவறான கொள்கையினால் மாணவர் கல்வி பாதிக்கப்படக்கூடாது. இப்பணியிடங்களை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

7. உடற்பயிற்சி, ஓவியம், கைத்தொழில், இசை போன்ற பாடங்கள் கலைத்திட்டத்தில் இருந்தும் அவற்றிற்கானப் பணியிடங்கள் நிரப்பப்படாமலும், தேவைக்கேற்பப் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாமலும் இருப்பதால் பல ஆண்டுகளாக மாணவரது பன்முக வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டு பள்ளிகள் வெறும் தேர்வு ஆயத்தப்பள்ளிகளாக மாறிவருவது விரும்பத்தக்கதல்ல. உடனடியாக இப்பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பள்ளிகள் உயிரோட்டமுள்ளக் கல்விக் கூடங்களாக மலர்ந்திடச் செய்யவேண்டும்.

8. ஐக்கிய நாட்டு அவையின் தீர்மானங்களை ஒட்டி, மனித உரிமைக்கல்வி தமிழ் நாட்டின் சில பள்ளிகளில் தற்பொழுது சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. மாறிவரும் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் மனித உரிமை பற்றிய முழுமையான புரிதலும் உணர்வும் கொண்டிருக்க வேண்டும் என்பது உலக அளவில் ஏற்கப்பட்டுள்ளதால், மனித உரிமைக் கல்வியைத் தனிப்பாடமாக எல்லாப் பள்ளிகளிலும் அதற்கானத் தனிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்க வகை செய்திட வேண்டும்.

9. ஆண்டுதோறும் தேசிய அளவில் வெளியிடப்படும் ASER (Annual Status of Education Report) தமிழ்நாட்டுக் கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவரது கற்றல் திறன்கள் மிகத்தாழ்ந்து இருப்பதைத் தெளிவாக ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. இது மிகுந்த கவலைக்கிடமான செய்தி. மாணவர் கற்றல் திறன்களை மேம்படுத்த போதுமான ஆசிரியர்களை நியமித்தும், மாணவர்க்கு குறைநீக்குத் திட்டம் (Remedial Programme) செயல்படுத்தியும் நேர் செய்தல் வேண்டும். காலதாமதம் தலைமுறைகளை பாதிக்கும்.

10. பள்ளிகளில் நிலவும் சமச்சீரின்மைக்கு ஒரு காரணம் முன்பருவக் கல்வி இல்லாமையே. மூன்று வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளுக்கும் மழலையர் பிரிவை எல்லாப் பள்ளிகளிலும் தொடங்கிட வேண்டும். மழலையர் வகுப்புச் செயல்பாடுகள், பாடத் திட்டம், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறித்து விதிகள் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். ஆங்கில வழிப்பள்ளிகளில் மழலையர் கல்வி நெறிமுறைகளுக்கு முரணாக நடத்தப் பெறும் நர்சரி வகுப்புகள் முறைப்படுத்தப்பட வேண்டும். மழலையர் கல்வியை முறையாக அளிக்கும் பொறுப்பிணை அரசே ஏற்க வேண்டும்.

11. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் வலுவிழந்த நிலையில் உள்ளன. அவற்றின் உண்மையான நிலையைக் கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அவற்றின் நிலையைக் கண்டு அறிய ஒரு உயர் மட்டக்குழு அமைத்து அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் பொதுப் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும்.

12. அரசியல் சட்ட சரத்து 21 A ஐ நடைமுறைப்படுத்தக் கொணரப்படும் கல்வி உரிமை மசோதாவில் பல குறைகளைக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அக்குறைகள் நீக்கப்பட்டு நாடாளுமன்றத்தால் விரைவில் நிறைவேற்றிட நடுவணரசினை வற்புறுத்தி மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அரசியல் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ள தமிழ்நாடு கட்டாயக் கல்விச் சட்டம், 1994 ஐ திரும்பப் பெற்று உரிய திருத்தங்களோடு புதிய சட்டம் இயற்றிடவேண்டும்.

13. தேசியகல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) 2005– ஆம் ஆண்டில் தேசியக் கலைத் திட்டவடிவமைப்பை (NCF 2005) வெளியிட்டது. அதன் அடிப்படையில் கலைத் திட்டங்கள், பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட புதிய கண்ணோட்டத்துடன் மாணவர் விரும்பும் வண்ணம் பாடநூல்களும் தயாரிக்கப்பட்டு சி.பி.எஸ்.ஈ பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில மாநிலங்கள் அவர் தம் மொழியில் மொழிபெயர்த்தோ அல்லது தழுவியோ தங்கள் மாநிலத் தேவைக்கேற்பப் பாடநூல்களைத் தயாரித்துள்ளனர். NCF 2005 ஐத் தமிழில் மொழியாக்கம் செய்து பரவலான விவாதத்திற்கு உட்படுத்த தே.க.ஆ.ப நிறுவனம் தமிழ்

நாட்டிற்கு நிதி ஒதுக்கியுள்ள போதிலும் அத்தகைய பரந்த விவாதம் நடை பெறவில்லை. காலந்தாழ்த்தியேனும் NCF 2005 அடிப்படையில் தக்க மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

14. தமிழக வரவு செலவுத் திட்டத்தில் 30% அளவு கல்விக்கு ஒதுக்கப்பட்ட காலம் உண்டு. தற்பொழுது 14 – 15 % அளவே பள்ளிக் கல்விக்கு ஒதுக்கப்படுகின்றது. ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் குறைந்தது 20 % ஆவது பள்ளிக் கல்விக்கு ஒதுக்கினால் தான் மேற்கூறிய சீரான மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

மேலும் நகராட்சி, மாநகராட்சிகள் வசூலிக்கும் தொடக்கக் கல்வி வரி முழுமையாகச் செலவழிக்கப்படாமலும், ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கல் போன்ற கல்வி சம்பந்தப்படாத இனங்களுக்குத் திருப்பிவிடப்படுவதும் வரிவிதிக்கும் நோக்கங்களை முறியடிக்கின்றது. எஸ்.எஸ்.ஏ திட்டப் பயன்கள் கிடைக்கப்பெறாத, ஆனால் தொடக்கக் கல்வி அளிப்பை மேம்படத்தக்கூடிய காரணங்களுக்கே இவ்வரி செலவழிக்கப்பட வேண்டும்.

15. கோத்தாரி குழு அறிக்கையை மையப்படுத்தி தேசிய கல்விக் கொள்கை 1968 வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் 1972–யில் தமிழ்நாட்டிற்கென்று கல்விக் கொள்கை மாநிலத் திட்டக்குழுவால் வெளியிடப்பட்டது. அதில் தமிழ், தமிழ் பண்பாடு, தமிழ் வழிக் கல்வி ஆகியவை வலியுறுத்தப்பட்டன. 1986, 1992 ஆகிய ஆண்டுகளில் தேசியக் கல்விக் கொள்கை புதுப்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் புதிய தேசியக் கொள்கை வகுக்கப்படவில்லை. தமிழகத்திலும் 1972க்குப் பிறகு மாநிலக் கல்விக் கொள்கை ஏதும் உருவாக்கப்படாததோடு 1972 கொள்கையினின்றி வெகுவாக விலகிச் சென்று தமிழ் புறந்தள்ளப்பட்டும் கல்வி அளிப்பில் சமச் சீரின்மை உருவாக்கியும் உள்ளது சரி செய்யப் படவேண்டும்.

**எஸ். எஸ். இராஜகோபாலன்    வி. வசந்திதேவி**
**அமைப்பாளர்கள், கல்வி**

## வகுப்பறை கட்டடம் இல்லை: மாணவ, மாணவியர் அவதி

வகுப்பறை கட்டடம் இல்லாததால், திறந்த வெளியில் மாணவ, மாணவியர் பாடம் படிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிப்பட்டு அடுத்த கோண சமுத்திரம் கிராமத்தில், அரசு உயர்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு ஆறு முதல் 10ம் வகுப்பு வரை 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படிக்கின்றனர். ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாக இருந்த இப்பள்ளி, கடந்த 2004ம் வருடம் ஆகஸ்ட் மாதம் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இதன்பிறகு, அதே பள்ளி வளாகத்தில் தொடக்கப்பள்ளிக்கும், உயர்நிலைப்பள்ளிக்கும் தனித்தனி வகுப்பறை கட்டடம் மற்றும் சத்துணவு சமையல் கூடம் என பிரிக்கப்பட்டது.

உயர்நிலைப்பள்ளிக்கென இரண்டு சிறிய வகுப்பறை கட்டடங்கள் மட்டுமே உள்ளன. இதனால், போதிய வகுப்பறை இல்லாததால், மாணவ, மாணவிகள் திறந்தவெளியில் அவலநிலை ஏற்பட்டுள்ளது. மரத்தடியில் படிக்க வேண்டிய மழைக்காலங்களில், ஒரே கட்டடத்தில் மூன்று வகுப்புகளை சேர்ந்த மாணவ, மாணவியர் ஒன்றாக ஆடு, மாடுகளை போன்று அடைத்து வைத்து ஆசிரியர்கள் பாடம் நடத்துகின்றனர். இது குறித்து, அக்கிராம மக்கள் உயர்நிலைப் பள்ளிக்கென தனியாக இடம் கொடுத்து அங்கு வகுப்பறை கட்டங்கள் கட்ட வேண்டி கல்வி துறை உயர் அதிகாரிகளிடம் சென்று மனு கொடுத்தனர். ஆனால், இது வரை அங்கு பள்ளிக்கட்டடம் கட்டப்படவில்லை. கட்டட வசதி இல்லாததால், மாணவ, மாணவியர் கம்ப்யூட்டர் பாடம் படிக்க வழங்கப்பட்ட கம்பூட்டர்கள் , அட்டைப் பெட்டிகளில் தூங்குகின்றனர். போதிய ஆசிரியர்கள் இருந்தும் இப்பள்ளிக்கு வகுப்பறை கட்டடம் இல்லாததால், மாணவர்கள் பாடம் படிக்க மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே, மாவட்ட கலெக்டர் தனியாக வேறு இடத்தில் புதிதாக வகுப்பறை கட்டடங்கள் கட்டித்தர உரிய நடவடிக்கை வேண்டும்.

**– தினமலர், 28.8.2009**

# அந்தரத்தில் நிற்கிறதா அனைவருக்கும் கல்வி ? ஒரு கள ஆய்வு

–வசந்தி சீனிவாசராவ்

பள்ளிக் கல்வி முறையில் மக்கள் பங்கேற்பு உள்ள பல்வேறு அம்சங்களை இணைத்து உருவாக்கப்பட்டது தான் அனைவருக்கும் கல்வி இயக்கம். திட்ட அமலாக்கத்தின் முதற்கட்டமாக ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டது. ஆந்திரமாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பழங்குடி மக்கள் குடியிருப்பில் பள்ளிக்கல்வி மேலாண்மைக்குழு (கிராம கல்விக்குழு) எவ்வாறு செயல்படுகிறது என இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. பள்ளிக்கல்வியை மேம்படுத்துவதில் இக்குழுவின் பணிகள் அவ்வளவு சிறப்புடையதாக இல்லையென்பதோடு, அனைவருக்கும் கல்வி இயக்கம் குறித்து கல்விக்குழு உறுப்பினர்களிடையே விழிப்புணர்வே இல்லையென, இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் ஆனது, 6 முதல் 14 வயதுவரையுள்ள குழந்தைகள் அனைவரும் 2010க்குள் பயனுள்ள, சமூக வாழ்க்கையோடு தொடர்புள்ள கல்வி பெறுவதோடு, இதன் மூலம் சமூக, வட்டார, பாலின இடைவெளிகள் இட்டு நிரப்பப்பட்டு விட வேண்டும் என்ற நோக்கத்தில் துவக்கப்பட்ட ஒரு முக்கியமான திட்டமாகும். ஒட்டு மொத்த சமூகத்தையுமே செயல்படச் செய்வது, முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது ஆகியவை இத்திட்டத்தின் மையக்குறிக்கோள்களாகும்.

ஏறத்தாழ எல்லா மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களுமே அனைவருக்கும் கல்வி இயக்கம் தொடர்பான கிராமக்கல்விக் குழுக்களை உருவாக்கிவிட்டன. இந்தக் குழுக்களின் பணி பள்ளிக்கல்வி அமைப்பில் கிராம சமூகத்தின் பங்கேற்பை உறுதி செய்வதாகும். கிராம சமூகத்தின் கட்டமைப்பு தொடர்பான படிநிலைப் பட்டியல் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இத்தகைய கிராம சமூகக் கட்டமைப்புத்தான் குறுஅலகுத்திட்டங்கள், குறிப்பாக கிராம கல்வி வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில், அமலாக்குவதில் தீவிரமான செல்வாக்கு செலுத்துகிறது. அனைவருக்கும் கல்விதிட்டத்தின் கீழ் வருடாந்தர வேலை – நிதித்திட்டம் ஆகியவை உள்ளூர் சமூகத்தின் பங்கேற்போடு, உள்ளூர் தேவைகள், குறிப்பான விவரங்கள் ஆகிவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்வதன் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. கிராமத்தில் கல்வி தொடர்பான அரசு நிதி அனைத்தும் இக்குழுவின் பொறுப்பில் அளிக்கப்படுகிறது. இத்தகைய பின்னணியில் அனைவருக்கும் கல்வி இயக்கம் அதன் முதற்கட்டத்தை நிறைவு செய்துள்ள நிலையில், ஆந்திரமாநிலத்தின் கிழக்கு கோதாவரிமாவட்டத்தின் ராம் பச்சோதாவரம் முகமைக்குட்பட்ட பட்டியலினப் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதியில் எந்த அளவுக்கு கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என ஆய்வு செய்ய முடிவு செய்தோம்.

**பொது மக்களில் 23 சதவீதம் பேருக்கு அனைவருக்கும் கல்வித்திட்டம் என்பது மதிய உணவுத்திட்டத்தோடு தொடர்புடையது என்ற புரிதல் தான் உள்ளது.**

ராம் பச்சோதாவரம் முகமை என்பது கல்வி வளர்ச்சியில் மாவட்ட அளவில் பின் தங்கியுள்ள, பழங்குடி மக்களின் வசிப்பிடமாகும். அதிலுள்ள ஏழு மண்டல் பகுதிகளில் ஒய். ராமாவரம், கங்காவரம், மற்றும் மாரேது மில்லி ஆகிய மூன்று மண்டல்களை நமது ஆய்வுக்கென தேர்வு செய்தோம். இவை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாவட்ட அளவிலேயே கல்வி அறிவு மிகக் குறைவான மண்டல்களாகும். மாவட்ட அளவில் கற்றோர் வீதம் 65.5%, ஆனால் இம்மூன்று மண்டல்களிலும் கற்றோர் வீதம் 37.4%, 42.5% மற்றும் 52.4%(2004).

ஆய்வுக்கான மண்டல்கள் எவையெனத் தேர்வு செய்வதற்காக பல கட்டங்களில் மாதிரி ஆய்வுகள் நடத்தப்பட்டு, அவை மூலம் எந்த பகுதிகள், எத்தகைய மக்கள் என ஒப்பிட்டுத் தேர்வு செய்யப்பட்டது.

இந்த மூன்று மண்டல்களிலும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து 26 சிற்றூர்கள், மொத்த மக்கள் தொகையில் 10 சதவீதத்தினர் ஆய்வுக்கெனத் தேர்வு செய்யப்பட்டனர். இந்த மக்கள் அனைவரும் பள்ளிக்கல்வி மேலாண்மைக்குழுவின் உறுப்பினர்களாவர். இவர்களில் மூன்று வகையினரை நாம் ஆய்வுக்கெனச் சந்தித்தோம். பெற்றோர் வகையினர் இருவர், உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர், அவர் ஊராட்சித் தலைவராகவோ அல்லது ஊராட்சி மன்ற உறுப்பினராகவோ இருக்கலாம். இவர்களோடு எல்லா ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும், நமது ஆய்வுக்கென தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பெரும்பாலானவை ஓராசிரியர் பள்ளிகளே. சில பள்ளிகளில் மிக அதிகபட்சமாக இரு ஆசிரியர்களே

### அட்டவணை:1 ஆய்வுக்கென தேர்வு செய்யப்பட்ட மாதிரிகள் விவரம்:

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | மொத்த கிராமங்களின் எண்ணிக்கை | மாதிரி கிராமங்களின் எண்ணிக்கை | பள்ளிக்கல்வி மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெற்றோர் | உள்ளாட்சி பொறுப்பாளர்கள் | பள்ளி ஆசிரியர்கள் | மொத்தம் |
| 1 | ஒய். ராமாவரம் | 131 | 13 | 26 | 13 | 22 | 61 |
| 2 | கங்காவரம் | 60 | 6 | 12 | 6 | 12 | 30 |
| 3 | மாரேதுமில்லி | 71 | 7 | 14 | 7 | 13 | 34 |
| | மொத்தம் | 262 | 26 | 52 | 26 | 47 | 125 |

உள்ளனர். இந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 26 சிற்றூர்களின் 26 பள்ளிக்கல்வி மேலாண்மைக் குழுக்களைச் சேர்ந்த 126 நபர்களிடம் 2006–ஆம் ஆண்டு ஒரு முன்னோடி ஆய்வு நடத்தப்பட்டது.

## 1. கிராமக்கல்விக்குழு உறுப்பினர்களிடையே விழிப்புணர்வு:

பள்ளிக்கல்வி மேலாண்மைக்குழு (இது முதல் கிராமக்கல்விக் குழு என அழைக்கலாம்) உறுப்பினர்களிடையே அனைவருக்கும் கல்வி இயக்கம் (திட்டம்) குறித்த விழிப்புணர்வு எவ்வாறு இருக்கிறது என காணலாம்.

### 1.1. அனைவருக்கும் கல்வி இயக்கம்:

கிராமக்கல்விக் குழுவின் அனைத்து வகை உறுப்பினர்களில் 67 சதவீதத்திற்கு மேலாக அனைவருக்கும் கல்வி இயக்கம் பற்றி தெரிந்திருக்கிறது என நமது கள ஆய்வு தெரிவிக்கிறது. அதே வேளையில் ஆசிரியர்களில் 87.2 சதம் பேரும், உள்ளாட்சி உறுப்பினர்களில் 61 சதவீதமும், பெற்றோரில் 52 சதவீதம் மக்களும் அனைவருக்கும் கல்வி இயக்கம் குறித்து நன்கு அறிந்துள்ளனர். ஆசிரியர்களாக பணியாற்றும் தன்னார்வலர்களுக்கு இத்திட்டம் பற்றி ஏதும் தெரியவில்லை. இவர்கள் கல்வியாண்டின் இடையில் பணியில் சேர்ந்த காரணத்தால் இத்திட்டம் குறித்து இவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை என்று அறிந்தோம். கிராமக்கல்விக் குழுவின் மூவகை உறுப்பினர்களில் 45 சதவீதம் மக்களுக்கு அனைவருக்கும் கல்வி இயக்கம் என்றால் என்ன என்றே தெரியவில்லை. இவர்களில் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. பொது மக்களில் 23 சதவீதம் பேருக்கு அனைவருக்கும் கல்வித்திட்டம் என்பது மதிய உணவுத்திட்டத்தோடு தொடர்புடையது என்ற புரிதல் தான் உள்ளது. மாரேது மில்லி மண்டலின் அகவலசா என்ற சிற்றூரின் கிராமக்கல்விக் குழுவின் உறுப்பினராகவுள்ள, பெற்றோரில் ஒருவராகிய பல்லால சுப்பாரெட்டி கூறும் போது ''நான் எனது மகளை நாள் தவறாமல் பள்ளிக்கு அனுப்புகிறேன். அனைவருக்கும் கல்வி இயக்கம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது. பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவருக்கும் பள்ளியில் மதிய உணவு வழங்கப்படுகிறது என்பது ஒன்று தான் எனக்குத் தெரியும்'' என்றார்.

### 1.2. குறு அலகு திட்டங்களை வடிவமைத்தல்:

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் துவக்க நடவடிக்கைகளில் மிக முக்கியமானது. மக்கள் குடியிருப்பின் அருகில், குடியிருப்பின் தன்மைகளுக்கு உகந்த கல்வித்திட்டங்களை வடிவமைப்பதில் உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பை நல்கச் செய்வது தான். அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் (இனி SSA என சுருக்கமாக அழைக்கலாம்) அடிப்படைக்குறிக்கோள் ஆரம்பக்கல்வியை அனைவருக்கும் பொதுவாக்குவது, குறிப்பாக 0–14 வயதுக் குழந்தைகள் ஒவ்வொருவரின் கல்வித்தேர்ச்சியையும் இடையறாது கண்காணிப்பது எனத் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. கிராமக்கல்விக் குழுக்களைக் கட்டியமைப்பதும், சமூகத்தலைவர்களுக்கு பள்ளிகளை நன்கு மேலாண்மை செய்வதற்கான பயிற்சியளிப்பதும் SSA இயக்கத்தின் துவக்க கால நடவடிக்கைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன (2000–ல் வெளியிடப்பட்ட மைய அரசு ஆணை) இது காலம் வரையில் கல்விக்குழுவோடு சம்மந்தப்பட்ட மூன்று வகையினரில் பெரும்பாலானவர்களுக்கு, அதாவது 90.4 சதவீதம் பேருக்கு (125 பேரில் 113 பேருக்கு) குறுஅலகுத் திட்ட வடிவமைப்பு குறித்து ஏதும் தெரியவில்லை. ஆசிரியர்களில் 87 சதவீதம் பேர் (47–ல் 41 பேர்) இது குறித்து அறிந்திருக்கவில்லை. இதற்கு முன்னர் குறு அலகு திட்டம் என்ற சொல்லை இவர்கள் கேள்விப்பட்டதேயில்லை என நமது கள ஆய்வின் போது அறிந்தோம். தமது மேலதிகாரிகள் தமது பள்ளிக்கு வருகை தந்த போது கூட குறு அலகு திட்டம் குறித்து ஏதும் தம்மிடம் கேட்டதேயில்லையென சில ஆசிரியர்கள் எங்களிடம் விளக்கமளித்தனர். மராரேது மில்லி மண்டலில் உள்ள கொண்டிவாடா கிராமத்தின் அரசு ஆரம்பப்பள்ளியின் தலைமையாசிரியர் கடாலா தேவி ரெட்டி ''நான் குறு அலகு திட்டம் பற்றி எந்தப் பயிற்சியும் பெற்றிருக்கவில்லை. இது மிகச்சிறிய கிராமம். இங்குள்ள குழந்தைகள் அனைவரைப்பற்றிய விவரமும் எனக்குத் தெரியும். இப்போதைக்கு எல்லாக் குழந்தைகளும்

தவறாமல் பள்ளிக்கு வருகிறார்கள். குறு அலகுத்திட்டம் என்பதே தேவையில்லாத ஒன்று'' என்கிறார்.

## 1.3. கிராமக்கல்விக்குழு பற்றிய விழிப்புணர்வு:

இந்த கிராமத்தில் பள்ளிக்கல்வி தொடர்பான குழு ஏதேனும் உள்ளதா என கல்விக்குழு உறுப்பினர்களில் பலரைக் கேட்டோம். ஏறத்தாழ சரிபாதிப் பேர் தங்களது கிராமத்தில் அத்தகைய குழு ஏதும் இல்லையென்றே பதிலளித்தனர். கிராமக் கல்விக்குழு உறுப்பினர்களுக்கே தாம் அந்தக் குழுவின் உறுப்பினர்கள் தான் என்று தெரியவில்லை. இதைவிடக் கொடுமை வேறெங்கேனும் உண்டா? ஆசிரியர்கள் /தலைமை ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் நாம் பேசிய 47 பேரில் 25 பேருக்கு (53 சதவீதத்தைக் காட்டிலும் அதிகம்) தாம் தான் அத்தகைய குழுவின் அமைப்பாளர் என்பது தெரிந்திருக்கவில்லை. கிராமக்கல்விக்குழு பற்றி அறிந்துள்ள ஆசிரியர் பலர் குழுக்கூட்டங்கள் நடைபெறும் விதம் பற்றி விளக்குகையில், அவை முறையான கூட்டம் நடத்துவது போல இல்லாமல், ஆசிரியர் ஒருவர் தீர்மானங்களைப் புத்தகத்தில் எழுத, மற்றவர்கள் பின்னர் அதில் கையெழுத்திடுவது வழக்கம் எனத் தெரிவித்தனர். ஆசிரியர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே உறுப்பினர்கள் கேள்வி எதுவும் எழுப்பாது கையெழுத்திட்டு விடுகின்றனர் என்று தெரிவித்தனர். அதே பிரச்சினையில் ஆசிரியர்கள் முன்வைக்கும் வாதம் வேறு வகையிலானது. மாரேது மில்லி மண்டலத்தின் குட்ரவாடா சிற்றூரின் கிராமத்துக்குட்பட்ட அரசு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கேச்சேலாரலட்சுமி ரெட்டி'' கல்விக்குழு உறுப்பினர்களைப் பலமுறை கூட்டத்திற்கு அழைத்தும் கூட ஒருவரும் வரவில்லை. பள்ளிவளாக வள ஆதாரப் பொறுப்பாளரும், ஒன்றியக்கல்வி அலுவலரும் என்னைத் தொடர்ந்து வற்புறுத்தியதால், முறையான கூட்டம் நடத்த இயலாத நிலையில் நான் வெறுமனே தீர்மானங்களை மட்டும் எழுதி அனுப்பி விட்டேன் என்று கூறினார். மேலும் பல பள்ளிகளில் கிராமக்கல்விக் குழுவின் தீர்மானப்புத்தகம் என்பது பராமரிக்கப்படுவதேயில்லை என்று நமது கள ஆய்வில் அறிந்தோம். நாம் சந்தித்த 125 பேரில் 63 பேர் (50.4 சதவீதம்) தாம் கிராமக்கல்விக் குழுவின் உறுப்பினர் என்ற விவரத்தையே அறிந்திருக்கவில்லை. ஒய். ராமாவரம் மண்டலைச் சேர்ந்த ஜி. ஒட்டிகட்டா கிராமத்தின் அரசு ஆரம்பப்பள்ளியில் கல்வி தன்னார்வலராகப் பணியாற்றும் பாலகட்டா ராமச்சந்திரா ரெட்டியிடம் பேசியபோது, அவர் '' நான் கடந்த ஐந்து மாதங்களாக இப்பள்ளியில் பணியாற்றுகிறேன். கல்விக்குழு என்பது பற்றி எவரும் என்னிடம் எதுவும் சொன்னதில்லை. இங்கு பணியாற்றும் கல்வி தன்னார்வப் பணியாளர்களாகிய இருவருக்குமே கல்விக்குழு குறித்த பயிற்சி அளிக்கப்படவில்லை'' என்று கூறினார். மாரேது மில்லி மண்டலின் ஜி. எம். வலசா ஊராட்சியைச் சேர்ந்த வாலமூரு கிராமத்தின் ஊராட்சித் தலைவர் பல்லால லீலா பிரசாத் ''நான் தான் கிராமக் கல்விக் குழுவின் தலைவர் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் கல்விக்குழுக் கூட்டங்கள் இங்கு முறையாக நடத்தப்படுவதில்லை. பள்ளி ஆசிரியரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறார். பள்ளி நடத்துவது சம்மந்தமான எல்லா விசயங்களிலும் நாங்கள் பள்ளி ஆசிரியருக்கு ஆதரவாக இருக்கிறோம்'' என்றார். பள்ளி ஆசிரியர்கள் மட்டுமல்லாது உள்ளாட்சி அமைப்பின் பொறுப்பில் இருப்பவர்கள் கூட, கிராமக்கல்விக்குழுவின் கூட்டங்களை முறையாக நடத்துவதற்கு எவ்விதமான முன்முயற்சிகளும் செய்வதில்லை என்பது இதன் மூலம் தெரியவருகிறது.

## 2. வசதிக்கான வாய்ப்புகள்:

பள்ளிக்கல்வியைச் சிறந்த முறையில் கற்பிக்கவும், முறையான கல்வி வளர்ச்சிக்கும், ஏராளமான அடிப்படை வசதிகளும், கட்டமைப்புகளும் தேவைப்படுகின்றன. அதிலும் பழங்குடியினத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் போது, அதற்கான கூடுதல் பயிற்சிப்பொருட்கள் இருக்க வேண்டியது கட்டாயத் தேவையாகும். ஏனெனில் ஆசிரியர் வகுப்பில் பாடம் கற்பிக்கும் போது அவை தொடர்பான விளையாட்டுப் பொருட்களை மாணவர் மத்தியில் சுட்டி விளக்குகையில் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதை மாணவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ள இயலும். ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு பாடம் நடத்துகையில் இத்தகைய கல்விப்பயிற்சிப் பொருட்கள் பயன்படுத்தப்படுவது ஏற்கனவே வழக்கத்தில் உள்ள நடைமுறைதான். கழிப்பறை உள்ளிட்ட தேவைகளை நிறைவு செய்வது ஆரம்பப் பள்ளிக் கல்வியை ஆரோக்கியமான சூழலில் அளித்தலுக்கான அடிப்படைக் கோட்பாடாகும். இம்மாதிரியான சுகாதார வசதிகள் குறித்து நாம் தேர்வு செய்த 26 பள்ளிகளிலும் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த 26 பள்ளிகளில் 13 பள்ளிகள் அரசு ஆரம்பப் பள்ளிகளாகும். ஒன்பது மண்டல் பள்ளிகளும், மூன்று ஒருங்கிணைந்த இருபாலார் பள்ளிகளும், ஒரு மண்டல் உயர் துவக்கப்பள்ளியும் இவற்றில் அடங்கும். இந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் நிலவும் அடிப்படை வசதிகளின் குறைபாடுகள் குறித்து அட்டவணை 2 விளக்குகிறது.

**பள்ளியில் உள்ள அடிப்படை வசதிகள்:**
**(பள்ளிகளின் எண்ணிக்கை)**

| | உள்ளது | இல்லை |
|---|---|---|
| 1. கரும்பலகை | 24 | 2 |
| 2. தொலைக்காட்சிப் பெட்டி | 26 | 0 |
| 3. கல்விப் பயிற்சிப் பொருட்கள் | 14 | 12 |
| 4. மின்சாரம் | 7 | 19 |
| 5. தனி வகுப்பறைகள் | 2 | 24 |
| 6. நூலகம் | 14 | 12 |

| | | |
|---|---|---|
| 7. ஆசிரியர்களுக்கான அறை | 2 | 24 |
| 8. விளையாட்டுத் திடல் | 7 | 19 |
| 9. குடிநீர் | 8 | 18 |
| 10. சிறுவர்கள் கழிப்பறை | 6 | 20 |
| 11. சிறுமிகளுக்கான கழிப்பறை | 8 | 18 |

## 3. கிராமக்கல்விக்குழு உறுப்பினர்களின் பங்கேற்பு:

கிராமக்கல்விக்குழு உறுப்பினர்கள் தத்தமது குழுக்களில் தமது பங்கேற்பை எவ்வாறு நிறைவு செய்கின்றனர் என்பதை பின்வரும் விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

### 3.1. மாதாந்திரக் கூட்டங்கள்:

கிராமக் கல்விக் குழுக்களின் மூலம் அதிகாரப்பரவல் அடிப்படையில் திட்டங்களை உருவாக்குவதும், உள்ளூர் அளவில் முடிவுகள் எடுக்கத் துணை நிற்பதும் இதன் மூலம் கல்வி மற்றும் அது தொடர்பான இதர பணிகளில் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதும், கிராமக் கல்விக்குழுக்கள் உருவாக்கப்பட்டதற்கான அடிப்படைக் கொள்கைகளாகும். தமது குழந்தைகளின் கற்றல் செயல்பாடுகளில் பெற்றோர் ஊக்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனை ஒரு கோட்பாடாகக் கொண்டு, பள்ளி செல்லும் குழந்தைகளின் பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாளர்கள் ஆகியோர் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து அதிகாரப்பரவல் அடிப்படையில் உள்ளூர் அளவில் முடிவெடுக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே கிராமக் கல்விக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. எனவே குழு உறுப்பினர்கள் தமது கிராம அளவில் கல்வி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்துத் தீர்வு காண்பார்கள் என திட்டம் கூறுகிறது. ஆயினும், கிராமக்கல்விக் குழுக்களின் உறுப்பினர்களில் எழுபது சதவீதமளவுக்கு (125–ல் 87 பேர்) தமது பதவிக்காலத்தின் போது நடைபெற்ற இத்தகைய மாதாந்திரக்கூட்டங்கள் ஒன்றில் கூட பங்கேற்க இயலவில்லை யென்பதாக நமது கள ஆய்வின் மூலம் தொகுக்கப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. கங்காவரம் மண்டலைச் சேர்ந்த தொரமாமிடி கிராமத்தின் கல்விக்குழு உறுப்பினர் புமுலா சக்குபாய் ‘‘பள்ளியை ஒழுங்காக நடத்த வேண்டியது ஆசிரியரின் பொறுப்பு. நான் அந்தப் பள்ளிக் கல்விக்குழுவின் உறுப்பினராக இருக்கிறேன் என்பதே எனக்குத் தெரியாது. பள்ளிக்கல்விக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று இதுவரையில் என்னை யாருமே அழைத்ததில்லை’’ என்று கூறுகிறார். ஒய். ராமாவரம் மண்டலுக்குட்பட்ட, மரிகுண்டம் கிராமப்பள்ளியின் தலைமையாசிரியர் எஸ். பிரபாகர் ரெட்டி, பள்ளிக்கல்வி மேலாண்மைக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவது பற்றி தமது சொந்த அனுபவத்தை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். ‘‘கல்விக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவதே ஒரு சவாலான வேலை தான். உறுப்பினர்கள் விவாதங்களில் கவனம் செலுத்துவதே இல்லை. மதிய உணவுத்திட்ட அமலாக்கத்தில் ஏதாவது குறைபாடுகள், இடர்பாடுகள் நேரிட்டாலும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு வினாடி நேரத்தைச் செலவிடுவதற்குக் கூடத் தயாராக இல்லை. பெரும்பாலான சமயங்களில் கமிட்டியில் இல்லாத வெளி நபர்கள் துணையோடு கமிட்டி முன் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க நான் ஒருவனாகவே போராட வேண்டியுள்ளது. ஆயினும் ஊராட்சித் தலைவர் எனக்கு உதவிகரமாக இருக்கிறார்’’.

---

**பள்ளி சார்ந்த நடவடிக்கைகளில் பழங்குடி மக்களின் பங்கேற்பு ஆகக் கூடுதலாக இருக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட SSA திட்டத்தின் உட்கூறுகள் எவையும் முழுமையாக அமலாக்கப்படவில்லை**

---

கிராமக்கல்விக் குழு உறுப்பினர்களில் ஒருசிலர் தாம் கல்விக்குழுவில் பொறுப்பு வகித்த காலத்தில் கல்விக்குழு தொடர்பான பணிகளில் தீவிரமாகப் பங்கேற்றதாக நம்மிடம் தெரிவித்தனர். மொத்தம் பன்னிரண்டு பேர் (10 சதவீதம்) தமது பள்ளியிலிருந்து இடையில் நின்றுபோன மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்கத் துணை புரிந்ததாகக் கூறினர். ஆறு சதவீத உறுப்பினர்கள் தாம் மதிய உணவுத்திட்டம் முறையாகச் செயல்படுகிறதா எனக் கண்காணித்ததாகவும், அதனை முறைப்படுத்தும் பணிகளில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் பதிவு செய்துள்ளனர். ஒய். ராமாவரம் மண்டலைச் சேர்ந்த சிந்தகர்ரபாலம் கிராமக்கல்விக்குழு உறுப்பினர் திருமதி. பல்லால நாகமணி தாம் பள்ளியில் இருந்து இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்கும் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றது பற்றி விவரிக்கும் போது, ‘‘எங்களது கிராமத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் பள்ளியில் இருந்து நின்று விட்டனர். இது பற்றி அச்சிறுவர்களின் பெற்றோர்களிடத்தில் பலமுறை பேசிவிட்டேன். அந்த சிறுவர்களிடமும் திரும்பத் திரும்பப் பேசினேன். அவர்கள் என் தலையைக் கண்டாலே பதுங்கத் துவங்கி விட்டனர். இது பற்றி பள்ளி ஆசிரியர்களிடமும் பலமுறை புகார் சொல்லியாகிவிட்டது. கடைசியாக ஆசிரியர்கள், அக்குழந்தைகளின் பெற்றோர் உதவியோடு அக்குழந்தைகளை அருகிலுள்ள ஆசிரமத்துப் பள்ளியில் சேர்த்து விட்டேன்’’ என்று பெருமிதமாகப் பேசினார்.

## 3.2. பள்ளிக்கான நிதி வரவு:

SSA விதிகளின் படி ஒவ்வொரு பள்ளிக்கும் அதன் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு உண்டு. கற்பித்தலுக்கான சிறப்புப் பொருட்கள், பள்ளி வளர்ச்சி, இவையன்றி புதிய முயற்சிகளுக்காகவும் இந்நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம். கல்வி கற்பித்தலுக்கான சிறப்புப் பொருட்களை சம்மந்தப்பட்ட ஆசிரியர்தாமே வாங்கலாம், ஆனால் பள்ளி வளர்ச்சி, புதிய முயற்சிகளுக்கான செலவினங்கள் ஆகியவை தலைமை ஆசிரியரால் மட்டுமே மேற்கொள்ளப்படும். கிராமக் கல்விக் குழுவின் அமைப்பாளர் என்ற முறையில் தலைமையாசிரியர், கல்விக்குழுவின் மாதாந்திரக் கூட்டங்களில் செலவினங்களை முன்வைத்து, பள்ளி வளர்ச்சி நிதியிலிருந்து அச்செலவுகளை மேற்கொள்ள ஒப்புதல் கிடைத்தபின்னர், இது குறித்த எழுத்து வடிவிலான தீர்மானத்தை தலைமை ஆசிரியர் முன் மொழிந்து உறுப்பினர்களின் சம்மதம் பெறப்பட வேண்டும்.

நாம் நமது கள ஆய்வின் போது சந்தித்த கிராமக் கல்விக்குழு உறுப்பினர்களில், ஆசிரியர், உள்ளாட்சி அமைப்பின் பொறுப்பாளர்கள் அல்லாத உள்ளூர் சமூக உறுப்பினர்களில் பலர், பள்ளிக்கென இவ்வகையிலான நிதி வருவது குறித்து தமக்கு இதுவரை எதுவுமே தெரியாது எனக்கூறினர். அவர்கள் மேலும் கூறுகையில் ‘‘ஆசிரியர்கள் பள்ளிக்கு நிதி வருவது பற்றியோ, அல்லது செலவுகள் செய்யப்படுவது பற்றியோ இதுவரை எங்களிடம் வெளிப்படையாகச் சொன்னதே இல்லை’’ எனக்கூறினர். இதன் விளைவாக நிதி வகை சார்ந்த எல்லாவற்றிலும் ஆசிரியர்களுக்குத் தான் அதிகாரம் இருக்கிறது போலும் எனப்பொது மக்கள் கருதும் நிலை உள்ளது. இது வரையில் ஆசிரியர்கள் தம்மிடம் எதுவும் கலந்து பேசாமலே தமது விருப்பத்திற்கு ஏற்ப பள்ளி நிதியைச் செலவிட்டு வந்துள்ளனர் என்ற கோபவுணர்வு மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கூட்டங்களில் தாம் எது பற்றி விவாதிக்க வேண்டும் என்பதே தமக்குத் தெரியாது என கல்விக்குழு உறுப்பினர்களில் பலர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். பள்ளி சார்ந்த நடவடிக்கைகளில் பழங்குடி மக்களின் பங்கேற்பு ஆகக் கூடுதலாக இருக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட SSA திட்டத்தின் உட்கூறுகள் எவையும் முழுமையாக அமலாக்கப்படவில்லையென்பதை மேற்கண்ட விவரங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## 4. ஆலோசனை:

கிராமக்கல்விக் குழு உறுப்பினர்களிடம் அவர்களது ஊரின் கல்விக்குழு சிறப்பாகச் செயல்பட என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனைகளைக் கூறுமாறு கோரினோம். வியப்பூட்டும் விதத்தில் அவர்கள் எண்ணிலடங்காத ஏராளமான ஆலோசனைகள் குவிந்துவிட்டன. 17 சதவீதம் (125ல் 21 பேர்) பேர் பழங்குடிப் பெற்றோரிடையே விழிப்புணர்வு ஊட்டுவதன் மூலம் அவர்களைப் பள்ளி நடவடிக்கைகளில் பங்கேற்கச் செய்யலாம் என்றனர். பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதியில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி அனுபவம் வாய்ந்த கங்காவரம் மண்டல், ஜக்கம் பாலம் கிராம மண்டல் உயர்துவக்கப்பள்ளியின் தலைமையாசிரியர், வி. பிரபாகர வாசுதேவராவ் ‘‘நான் பழங்குடி மக்கள் சமூகத்தோடு மிக நெருக்கமாகப்பழகிப் பணியாற்றியுள்ளேன். அவர்களில் பெரும்பாலோருக்கு கல்வியின் மதிப்பு தெரியவில்லை. அவர்கள் கிராமக்கல்விக் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்த போதிலும் கூட, தமது பொறுப்பு கடமைகள் குறித்து அறியாமல் உள்ளனர். கலைக்குழுப் பயணங்களின் மூலம் அவர்களிடையே விழிப்புணர்வு பரப்பிட முயன்றால் பயன் விளையும். நாம் உண்மையாகவே முயற்சி செய்தோமானால், அவர்களை இந்த இயக்கத்திற்குள் எளிதாக ஈர்த்து விடலாம்’’ என்று கூறுகிறார். மதிய உணவுத்திட்டத்தை நாள் தவறாமல் செயல்படுத்துவது, பள்ளிவளாகத்தில் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்வது, கல்விப் பயிற்சிப் பொருட்களை ஆசிரியர்கள் உண்மையாகவே பயன்படுத்தச் செய்வது, பள்ளிவளாகக் கட்டமைப்பைச் செம்மைப்படுத்துவது போன்ற இன்னபிற ஆலோசனைகள் குவிந்துள்ளன. பழங்குடி இனத்தைச் சார்ந்த பெற்றோர் பள்ளி சார்ந்த நடவடிக்கைகளில் ஏதாவது ஒரு வகையில் பங்காற்றி வருவதையே இவையாவும் புலப்படுத்துகின்றன. ஆயினும், இவர்களனை வரையும் பொது மேடை ஒன்றில் ஒருங்கிணைக்கும் வகையில் பழங்குடிமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் முகமாக இந்திய சுற்றுலா வளர்ச்சி ஆணையம் சிறப்பு கவனம் செலுத்துமானால் வியக்கத்தக்க விளைவுகள் ஏற்படுவது நிச்சயம் எனலாம்.

## குறிப்புகள்:

1. கிராமக்கல்விக்குழு என்பது ஆந்திர மாநிலத்தில் 2006ஆம் ஆண்டு பள்ளிக்கல்வி மேலாண்மைக்குழு எனப்பெயர் மாற்றம் பெற்றுள்ளது.
2. பள்ளியில் பயிலும் குழந்தைகளின் பெற்றோரில் நால்வர், ஊராட்சி உறுப்பினர் ஒருவர், குழுவின் அமைப்பாளராக பள்ளித் தலைமையாசிரியர், குழுத் தலைவராக ஊராட்சித் தலைவர் என மொத்தம் 7 பேர் இக்குழு உறுப்பினர்களாவர்.
3. ’முகமை’ என்ற சொல் காலனிய ஆதிக்க ஆட்சியில் புழக்கத்தில் இருந்ததாகும். பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் பழங்குடி மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகள் ’முகமைப் பகுதி’ என அழைக்கப்பட்டன. அங்குள்ள சட்ட, கொள்கை அமலாக்கம் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டதாகும்.
4. 1986–ம் ஆண்டின் 302வது அரசு ஆணையின்படி

பழங்குடி மக்களிடையே கல்விவளர்ச்சிக்கென 1000 ஓராசிரியர் பள்ளிகள் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் ''ஆரம்பப்பள்ளிகள்'' என்ற பெயரில் துவக்கப்பட்டன. 1994ல் மலை மக்கள் குடியிருப்புப் பள்ளிகள் (Girijan Vidya Vikas Kendra) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இப்பள்ளிகள், 2005ல் மீண்டும் ''அரசு ஆரம்பப் பள்ளிகள் (பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறை) எனப் பெயர் மாற்றத்துக்கு ஆட்பட்டன.

5. ஒருங்கிணைந்த பள்ளிகள் எனப்படுபவை 'மாற்றுப்பள்ளிகள்' எனவும் அழைக்கப்படுகின்றன. இவை பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் செயல்படுபவை. இவை பள்ளிகளே இல்லாத, ஒரு குடியிருப்புப் பகுதியில் பள்ளி செல்லும் வயதுள்ள 5 முதல் 10 எண்ணிக்கையிலான குழந்தைகள் இருப்பின் அக்குழந்தைகள் இப்பள்ளியில் இணைந்து, இரண்டாம் வகுப்பு வரையில் கல்வி பயிலலாம்.

**– எக்கனாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி, 2009**

## போதிய ஆசிரியர்கள் இல்லாமையால் அரசு மேல்நிலை பள்ளி அவலம்

பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகளின் மொத்தனத்தால், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சி.கண்ணன் சிவா அரசு மேல் நிலைப்பள்ளி 15 ஆண்டுகளாக போதிய ஆசிரியர்கள் இல்லாமல் படிப்படியாக மூடுவிழாவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. செய்யாறு கல்வி மாவட்டம், கோவிலூரில் ஆர்.சி. கண்ணன் சிவா அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்த இப்பள்ளியில், தற்போது 350 பேர் மட்டுமே படித்து வருகின்றனர். கடந்த பிளஸ் 2 பொதுத்தேர்வில் இப்பள்ளி வெறும் 46 சதவீத தேர்ச்சியைத் தான் பெற்றது. வேதியியல், பொருளியல், வணிகவியல் பாடங்களுக்கு 15 ஆண்டுகளாக முதுகலை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக முதுகலை கணித பாட ஆசிரியர் பணியிடம், தமிழ் மற்றும் ஆங்கில பாட முதுகலை ஆசிரியர் காலி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. தற்போதைய நிலவரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் 11 இடங்கள் காலியாக உள்ளன. இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கும், பிளஸ் 2 வகுப்புகளுக்கு வேதியியல், பொருளியல், வணிகவியல் பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கும் இதுவரை பள்ளிக் கல்வித்துறை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தலைமை ஆசிரியர் உட்பட மொத்தம் 10 பேர் தான் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். தலைமை ஆசிரியர், ஓவிய ஆசிரியர் உள்ளிட்ட மூன்று ஆசிரியர்கள் தவிர்த்து, ஏழு ஆசிரியர்கள் மட்டும் வகுப்புகளை நடத்தி வருகின்றனர். பக்கத்து ஊர்களில் இருந்து எட்டு ஆசிரியர்களை கூடுதல் பொறுப்பாக, இப்பள்ளியிலும் வகுப்புகளை நடத்துமாறு மாவட்ட கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

ஆசிரியர் மாறுதல் கவுன்சிலிங்கில், இந்தப் பள்ளிக்கு புதிய ஆசிரியர்கள் வந்தாலும் இரண்டு மாதங்கள் கூட நிலைப்பதில்லை என்று, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சிவகுமாரன் வேதனை தெரிவிக்கிறார். அவர் கூறியதாவது: நன்றாக நடந்து வந்த பள்ளி, இன்று போதிய ஆசிரியர்கள் இல்லாமல் பெரிய வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய பிளஸ் 2 வகுப்பிற்கு முக்கிய பாடங்களில், 15 ஆண்டுகளாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாத கொடுமை, மாநிலத்தில் வேறு எந்த அரசு பள்ளிகளிலும் நடந்திருக்காது. ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. பிளஸ் 2 வரலாறு பிரிவில் ஆசிரியர்கள் இல்லாததால், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் ஒரு மாணவர் கூட சேரவில்லை. நியமிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை நிரப்பக்கோரி 15 ஆண்டுகளாக போராடி வருகிறோம். ஏராளமான மனுக்கள் தரப்பட்டுவிட்டன. 'நடவடிக்கை எடுக்கிறோம்' என்ற பதிலைத் தான் அதிகாரிகள் திரும்பத்திரும்ப கூறுகின்றனர். இந்தப் பகுதியில் வீட்டு வாடகைப்படி மிகவும் குறைவு என்பதால், ஆசிரியர்கள் நிரந்தரமாக பணியாற்ற மறுக்கின்றனர். பொது மாறுதலில் உத்தரவு பெற்று வந்தாலும், உடனடியாக நகரங்களுக்கு மாறுதல் வாங்கிச் சென்று விடுகின்றனர். இப்படியிருந்தால், கிராமப்புற பள்ளிகளின் எதிர்காலம் என்ன ஆவது ? இவ்வாறு அவர் குமுறினார். ஆசிரியர் இல்லாத பிரச்னையால், கடந்த ஜூன் மாதம் பள்ளி திறந்த முதல் நாளே, கிராம மக்கள் பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். கோவிலூரர் அரசு மேல்நிலைப்பள்ளிக்குத் தேவையான ஆசிரியர்களை நியமனம் செய்யவும், நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் தொடர்ந்து அங்கேயே பணியாற்றவும் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**– தினமலர், 21.8.09**

# தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

**இந்திய அரசு**

**5ம் தளம், சந்திரலோக் பில்டிங், 36, ஜன்பாத், புதுதில்லி – 110001**

**எண் NCPCR/Edu**.1/07/39 மே 26, 2009

**பள்ளிகளில் உடல்ரீதியான தண்டனைகள் குறித்த கூடுதல் வழிகாட்டல்கள்:**

1. நாட்டின் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் குறித்து தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கவலை கொள்கிறது. ஆணையத்திற்குக் குழந்தைகளிடமிருந்து வந்துள்ள புகார்களில் அவர்கள் பள்ளிகளில் சந்திக்கும் அவமானங்கள், இழிவுகள் பற்றி அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட்டாரப் பத்திரிகைகளிலும் தேசியப் பத்திரிகைகளிலும் பள்ளிகளில் குழந்தைகள் அனுபவிக்கும் வன்முறைகளை வெளிப்படுத்தும் செய்திகள் வந்துள்ளன.

2. இது தொடர்பாக, 9 ஆகஸ்ட், 2007 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, உடல்ரீதியான தண்டனைகள் பற்றிய வழிகாட்டல், ஆணையத்திலிருந்து அனைத்து மாநில அரசுகளின் தலைமைச் செயலர்கள்/யூனியன் பிரதேசங்களின் தலைமை நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது நினைவுகூறத்தக்கது. இந்த வழிகாட்டல் நகல் ஒவ்வொரு பள்ளியிலும் வெளிப்படையாக ஒட்டப்பட்டு போதிய அளவுக்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

3. குழந்தைகள் மீதான உடல்ரீதியான தண்டனைகளை நிரந்தரமாகத் தடுப்பதற்காகவும், பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளை மரியாதையிலும் கவுரத்திலும் சமமான மனிதர்களாகக் கருதி நடத்துவதற்காகவும் (அந்தந்தப் பகுதியைப் பொறுத்து) மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள்/துணை ஆணையர்கள் பின்வரும் நடவடிக்கைகளை (மேற்படி இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுடன் கூடுதலாக) மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையம் எதிர்பார்க்கிறது

   (i) உடல்ரீதியான தண்டனைகள் தொடர்பாக வட்டார அளவில் அனைத்துப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கூட்டத்தைக் கூட்டி, மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு எதிரான எந்த ஒரு வன்முறைச் செயல் நடந்தாலும் ஒட்டு மொத்தத்தில் சம்பந்தப்பட்ட பள்ளியின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

   (ii) குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், பள்ளிகளில் உடல்ரீதியான தண்டனைகளுக்கு எதிராகவும் மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், சம்பந்தப்பட்ட வட்டார ஆதார மையங்களின் பணியாளர்கள் கூட்டங்களை நடத்தி பள்ளிகளில் குழந்தை உரிமைகள் எந்த வகையில் மீறப்பட்டாலும், உடல்ரீதியான தண்டனைகள் அளிக்கப்பட்டாலும் அதற்கு அவர்கள்தான் பொறுப்பாக்கப்படுவார்கள் என்று தெரிவிக்க வேண்டும்.

   (iii) என்சிபிசிஆர் வழிகாட்டல்கள் குறித்தும், குழந்தைகளையும் அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பது குறித்தும் ஒவ்வொரு பள்ளியின் தலைமையாசிரியரும் தமது பள்ளியில் அனைத்துப் பெற்றோர்களும் பங்கேற்கும் பேரவைக் கூட்டங்கள், அதே போல் பள்ளிக் கல்விக் குழு அல்லது பெற்றோர்–ஆசிரியர் கழகக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

4. சம்பந்தப்பட் மாநில அரசின்/யூனியன் பிரதேச அரசின் பள்ளிக் கல்விச் செயலருக்கு (அந்தந்தப் பகுதியைப் பொறுத்து) மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள்/துணை ஆணையர்கள் மேற்கூறியது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான அறிக்கையை 2009 ஆகஸ்ட் 1ம் தேதி வாக்கில் அனுப்பிவைக்க வேண்டும். அவர் மாநிலத்தின்/யூனியன் பிரதேசத்தின் அனைத்து

மாவட்டங்கள் தொடர்பாக ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையை, ஆணையம் வெளியிட்ட முந்தைய வழிகாட்டல்கள், இந்தக் கூடுதல் வழிகாட்டல்கள் தொடர்பாக வெளியிட்ட கடிதங்கள் / சுற்றறிக்கைகளின் நகல்களுடன் ஆணையத்திற்கு 2009, செப்டம்பர் 1ம் தேதி வாக்கில் அனுப்பிவைக்க வேண்டும்..

**சாந்தா சின்ஹா**
**தலைவர், (என்சிபிசிஆர்)**

**பெறுநர்:** நாட்டின் மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள் / துணை ஆணையர்கள்

**நகல்:**

1. மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலர்கள்/நிர்வாக அலுவலர்களுக்கு – இது தொடர்பாக உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்ற வேண்டுகொளுடன்.

2. மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்களின் பள்ளிக் கல்வித்துறை செயலர்களுக்கு – உரிய ஆணைகள் பிறப்பிக்க வெண்டும் என்ற வேண்டுகொளுடனும், சம்பந்தப்பட்ட மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் அனைத்து மாவட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை ஆணையத்திற்கு, இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட கடிதங்கள்/சுற்றறிக்கைகளின் நகல்களுடன் 2009 செப்டம்பர் 1ம் தேதி வாக்கில் அனுப்ப வேண்டும் என்ற வேண்டுகொளுடன்.

**சாந்தா சின்ஹா,**
**தலைவர், என்சிபிசிஆர்**

**இணைப்பு:** 2007 ஆகஸ்ட் 9 தெதியிட்ட ஆணையத்தின் வழிகாட்டல்கள்

**மேலும் நகல்கள்:**

செயலர்(கல்வி), பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு, சாஸ்திரி பவன், புது தில்லி – தகவலுக்காகவும், இது தொடர்பாக அமைச்சகத்திடமிருந்து மாநில அரசுகள் / யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலர்கள் / கல்வித்துறை செயலர்கள் / சர்வ ஷிக்ஷா அபியான் மாநில திட்ட இயக்குநர்கள் ஆகியோருக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன்; குழந்தைகள் குறிப்பாக முதல் தலைமுறையாகக் கற்பவர்கள் பள்ளிகளில் மதிப்புடனும் கவுரவத்துடனும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஆணையம் பிறப்பித்துள்ள ஆணைகளை பரவலாக விளம்பரப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளுடன்.

**சாந்தா சின்ஹா,**
**தலைவர், என்சிபிசிஆர்**

## மாணவியிடம் சில்மிஷம்: ஆசிரியர் கைது

மாணவியிடம் சில்மிஷம் செய்த இயற்பியல் ஆசிரியரை, சி.பி.சி.ஐ.டி., போலீசார் கைது செய்துள்ளனர். திருவள்ளுரைச் சேர்ந்த காசி என்பவரது மகள் துர்கா (14). அப்பகுதியில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தார். மதிய உணவு இடைவெளியல், இயற்பியல் ஆய்வுக் கூடத்திற்கு சென்றார். அப்போது, இயற்பியல் ஆசிரியர் பழனிச்சாமி(30), மாணவியிடம் முறைகேடாக நடந்து கொண்டார். மூன்று நாட்கள் கழித்து இச்சம்பவம் குறித்து, தாய் காஞ்சனாவிடம் மாணவி தெரிவித்தார். 'ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி' வெங்கல் போலீசில் காஞ்சனா புகார் கொடுத்தார். கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் வழக்கு பதிவு செய்த போலீசார், தவறான முகாந்திரத்தின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டதாகக் கூறி, மறுநாளே வழக்கை முடித்தனர்.

திருவள்ளூர் கோர்ட்டில் மனு தாக்கல் செய்த காஞ்சனா, எனது மகளிடம் தவறாக நடந்து கொண்ட ஆசிரியர் மீதான வழக்கை சி.பி.சி.ஐ.டி., க்கு மாற்ற வேண்டும் எனக் கோரினார். அதை ஏற்ற கோர்ட், சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு உத்தரவிட்டது. எஸ்.பி., மல்லிகா, டி.எஸ்.பி., சுப்புலட்சுமி, இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ் பாபு, செல்வகுமார் விசாரணை நடத்தினர். ஆசிரியர் மீதான குற்றத்தை உறுதி செய்தனர். ஆசிரியருக்கு வரும் 20ம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவியை சில்மிஷம் செய்த வழக்கில் நேற்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**– தினமலர், 5.5.09**

# தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

**இந்திய அரசு**

**5ம் தளம், சந்திரலோக் பில்டிங், 36, ஜன்பாத், புதுதில்லி – 110001**

D.O. No. CP/ Public Hearing / Chennai / 2007 / 3 பிப்ரவரி 4, 2008

அன்புடையீர்,

‘தமிழகத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் விடுதிகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உடல் ரீதியான தண்டனை, அனைத்து விதமான சித்ரவதைகள், இழிவுபடுத்தும் நடத்து முறைகள், பாலியல் அத்துமீறல்கள் மற்றும் குழந்தைகள் புறக்கணிக்கப்படுதல்’ தொடர்பாக சென்னையில் 2008 ஜனவரி 23 அன்று தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆர்) ஒரு பொது விசாரணையை நடத்தியது. உடல் ரீதியான தண்டனைகள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 10 குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டார்கள். 8க்கும் மேற்பட்ட குழந்தைகள் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப் பட்டார்கள் என்பதை அறிந்து நடுவர் குழுவினர் வேதனை அடைந்தனர். குழந்தைகளை பாதுகாப்பதில் கல்வி நிறுவனங்கள் மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்வதை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

கொள்கைகளை உருவாக்கும் இடத்தில் உள்ளவர்கள் கவனித்தாக வேண்டிய முக்கிய பிரச்சனைகள் சிலவற்றை பொது விசாரணை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. உரிய நடவடிக்கை கோரி சில பரிந்துரைகளை நாங்கள் முன் வைக்கிறோம்:

**பொதுப் பரிந்துரைகள்:**

1. சேர்க்கப்படும் குழந்தைகளின் நலன்களுக்கு கல்வி நிறுவனம் (பள்ளி / விடுதி / பாலர் இல்லம்) பொறுப்பேற்க வேண்டும். குழந்தைகளுக்கு காயமோ / உடல் நல குறைவோ / தாக்குதலோ / மரணமோ நிகழுமானால் அதற்கு, காவல் நிலையத்திலோ சிறையிலோ கைதிகளுக்கு இவ்வாறு நிகழும்போது காவல்துறை பொறுப்பாக்கப்படுவதுபோல், சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனமே பொறுப்பாக்கப்பட வேண்டும்.

2. கல்வி நிறுவனத்திற்குள் நடைபெறும் எந்த ஒரு சம்பவத்தாலும் குழந்தைக்கு மரணமோ / காயமோ ஏற்படுமானால் அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படுமானால் அதற்கான செலவை கல்வி நிறுவன நிர்வாகமே ஈடுகட்ட வேண்டும்.

3. குழந்தைகளுக்கு எதிராக நடைபெறக்கூடிய ஒவ்வொரு வன்முறை தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட கல்வித்துறை / வாரியம் ஒரு இணையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய விசாரணைகளில் பெற்றோர் – ஆசிரியர் கழகங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

4. குழந்தைகள் பாலியல் அத்துமீறலுக்கு உட்படுத்தப்படுவது தொடர்பான வழக்குகளில், பெற்றோர் புகாரை விலக்கிக் கொள்வார்களானால், நடந்த குற்றம் தொடர்பாக அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு, குழந்தைக்கு பாதிப்பு ஏற்படாமல் வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் மீது கறாரான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. பாகுபாடுகள் காட்டப்படுவதாக ஒரு குழந்தை எப்போது தெரிவித்தாலும், எஸ்.சி / எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

6. உடல் ரீதியான தண்டனைகள் அளிக்கப் பட்டிருக்குமானால், உடல்ரீதியான தண்டனை தொடர்பாக குழந்தைகளும் பங்கேற்கிற ஒரு சமூகத் தணிக்கையை கல்வித்துறை / வாரியம் நடத்த வேண்டும்.

7. குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குழந்தை நலக் குழுக்கள் ஆதரிக்கப்பட வேண்டும்.

**குழந்தை மரணமடைந்தால் அல்லது தற்கொலைக்கு முயன்றால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால்:**

8. ஒவ்வொரு தற்கொலை வழக்கும் 'தற்கொலைக்கு தூண்டிய' வழக்காக கருதப்பட வேண்டும்; அதற்கு சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தின் நிர்வாகம் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

9. ஒரு குழந்தை தற்கொலை செய்துகொள்ள முயல்கிறபோது, அதை சட்டப்படி 'தற்கொலை முயற்சி' வழக்காக எடுத்துக்கொள்ள முடியாது, அது குழந்தையை இரண்டு முறை தண்டிப்பதாகிவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

10. ஒரு ஆசிரியர் அல்லது ஆசிரியர்களின் செயலால் ஒரு குழந்தை தற்கொலை செய்துகொண்டால் / பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் / மருத்துமனையில் சேர்க்கப்பட்டால் குற்றம் சாட்டப்பட்டவர் (கள்) விசாரணை முடியும் வரையில் உடனடியாக பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட வேண்டும்.

11. ஒரு குழந்தை சந்தேகத்திற்குரிய காயங்கள் / உடல் நலக்குறைவுடன் மருத்துவமனையில் சேர்க்கப்படும் போதெல்லாம், ஒரு மருத்துவ – சட்ட வழக்காக மருத்துவமனை அதனை பதிவு செய்ய வேண்டும், குழந்தையின் வாக்குமூலத்தையும் பதிவு செய்ய வேண்டும்.

12. விடுதியில் தங்கியிருக்கும் குழந்தைக்கு எப்போது உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், அதைக் கண்காணிக்கவும், குழந்தையை எவ்வாறு மருத்துவமனைக்கு கொண்டு செல்வது என்பது தொடர்பாகவும் (அதற்கான நிதி ஒதுக்கீடு உட்பட), பெற்றோர் பள்ளிக்குச் சென்று குழந்தையை வீட்டுக்கு அழைத்துச் செல்லத் தேவையான போக்குவரத்து செலவை வழங்கவும் உரிய வழிமுறைகளை கல்வித்துறை அல்லது SWJD உருவாக்க வேண்டும்.

**தனியார் நிறுவனங்கள்:**

பொது விசாரணையில் தனியார் விடுதிகள் மற்றும் பள்ளிகளில் நடைபெறும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான பல பிரச்சனைகள் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் மறு பரிசீலனைகளை மேற்கொள்ள ஒரு குழுவை அமைக்குமாறு அரசுக்கு ஆணையம் பரிந்துரைக்கிறது:

13. தனியார் குழந்தை பராமரிப்பு / கல்வி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான நடைமுறைகள்.

14. இந்த தனியார் நிறுவனங்களை முறைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்குதல்.

ஜூலையில் நடந்த பொது விசாரணையில் குழந்தைகளைப் பாதுகாப்பது என்பதைவிட கல்வி நிறுவனங்களைப் பாதுகாப்பது என்பதற்கே மிகுந்த அழுத்தம் தரப்பட்டதாக ஆணையம் கருதுகிறது. குழந்தைகளையும் அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதன் மூலமாக மட்டுமே கல்வி நிறுவனங்களை பாதுகாக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு புகார் வரும்போதும், சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளுக்கு ஆணையம் தனது வழிகாட்டல்களுடன் கடிதங்களை அனுப்பி வருகிறது. தமிழக அரசு குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அன்புடன் உண்மையுள்ள

**சாந்தா சின்ஹா,**
தலைவர், என்சிபிசிஆர்

**டாக்டர். பூங்கோதை,**
அமைச்சர்,
சமூக நலத்துறை,
தமிழக அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை – **600 009.**

# பெண் குழந்தைகள் மீதான பாகுபாடு

(வடஇந்தியாவின் தொழில்நுட்ப, சமூக பொருளாதார நிலைமைகள் குறித்த ஓர் ஆய்வு)

– மேரி.இ.ஜான், ரவீந்தர் கௌர், ரஜினிபல்ரிவாலா, சரஸ்வதி ராஜூ

நமது நாட்டில் ஆண்–பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்துள்ள ஐந்து மாநிலங்களில், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாவட்டம் எனத் தேர்வு செய்து, மேற்கொள்ளப்பட்ட ஓர் நுணுக்கமான ஆய்வின் முடிவுகள், இத்தகைய பாலின விகித வீழ்ச்சிக்குப் பின்னணியாக அமைந்துள்ள சமூகக்காரணிகள் அல்லது சமூக செயல்பாடுகளுக்குக் காரணமான சமூகக் கொள்கைகள் நகரங்களில் அல்லது ஊரகப்பகுதிகளில் எவ்விதம் வேறுபடுகின்றன என ஆராய்கிறது இந்த ஆய்வு.

வட இந்தியாவில் ஆண்–பெண் விகித வீழ்ச்சியினாலும், அதிலும் மிகச் சமீபக்காலமாக ஆண்–பெண் குழந்தைகள் விகிதம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்து வருவதாலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அனைவரும் அறிந்ததே. இது குறித்து இதுவரை மிகத் தீவிரமான கவனம் செலுத்தப்படவில்லை. ஆயினும், இப்பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை புள்ளியியல், மக்கட்தொகையியல் ஆகியவற்றோடு பொதுவான திசைவழி ஆகியவற்றை ஆய்வு செய்து ஒரு மிகப்பெரிய கேள்விக்கு விடை தேட முயற்சி செய்துவந்துள்ளன.

நமது நாட்டிலேயே ஆண்–பெண் குழந்தை பிறப்பு விகிதம் மிக கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள ஐந்து மாவட்டங்களின் தனிப்பட்ட நபர்கள், குடும்பங்களின் செயல்பாடு குறித்து நுண்மையாக ஆராய நமது ஆய்வு முற்படுகிறது. அவை சுருக்கமாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த தரம், அளவுகளில் மிகப் புதுமையான முறையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, தற்போது வழக்கத்தில் உள்ள சமூக சிந்தனை, பாலினம் மற்றும் குடும்ப ரீதியான கருதுகோள்கள் மீது குவிகவனம் செலுத்துவதன் மூலம், ஏனெனில் அவை தாம் வெவ்வேறு நகர, ஊரகப்பகுதிகளில் வெவ்வேறு வகைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன என்ற உண்மை நிலையை கவனத்தில் வைத்து, இத்தகைய ஆண்–பெண் குழந்தைகள் பிறப்பு விகித வீழ்ச்சிக்கான சிக்கலான பல்வகைக் காரணிகளைக் கண்டறிய முயல்கிறது.

இந்த ஆய்வுக்காக காங்க்ரா (இமாச்சலப்பிரதேசம்), ஃபதேகர்சாஹிப் (பஞ்சாப்), ரோட்டக் (அரியானா), தௌல்பூர் (ராஜஸ்தான்), மற்றும் மொரேனா (மத்தியப்பிரதேசம்) ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன. இவையாவும் ஆண்–பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் மிகக்குறைவாக உள்ளவையாகும். இந்த ஆய்வு இரண்டு கட்டங்களாகச் செய்யப்பட்டது. காங்க்ரா, மொரேனா மற்றும் தௌல்பூரில் 2003–04ல், ரோட்டக், ஃபதேகர் சாஹிபில் 2005–06ல். இந்தச் சுருக்கக் குறிப்பில் ஆய்வின் முடிவுகள் சிலவற்றை மட்டுமே அளிக்க இயலும், இதன் பொருள் மாநில அளவில் குறிப்பிட்ட சில சிறிய வேறுபாடுகள், அவை நமது பொது முடிவுக்கு மாறுபாடாக உள்ள நிலையில், விடுபட்டுள்ளன என்பது தான்.

ஆய்வுக்கென தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள ஆண்–பெண் விகிதம் சம்மந்தமான அடிப்படைத் தகவல்களை அட்டவணை–1 விளக்குகிறது. ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளுக்குள்ளாக சிலவற்றில் குழந்தைகள் பாலின விகிதம் நிறைவளிக்கத்தக்க வகையில் இருப்பினும், பொதுவான நிலைமையில் முன்னேற்றம் ஏதும் இல்லை. குறிப்பாக நகரப் பகுதிகளில் குழந்தைகள் பாலினவிகிதம் மிகக்குறைவாகவே உள்ளது. ஆனால் ரோட்டக், ஃபதேகர் சாஹிப் ஆகியவற்றில் நகர, ஊரகப் பகுதிகளுக்கிடையேயான பெரிய வேறுபாடு ஏதும் இல்லை எனலாம். தௌல்பூரின் நகரப் பகுதிகள் விதிவிலக்காக உள்ளன. ஆனால் அவை பற்றி விரிவாக விளக்க இங்கு இடமில்லை. ஃபதேகர் சாஹிப், ரோட்டக், காங்க்ரா ஆகியவற்றில் ஒட்டு மொத்தப் பாலின விகிதத்தை விட 0–14 வயதுள்ள குழந்தைகளின் விகிதம் மோசமாகவும், அதனை விட 0–6 வயதில் இது மிகக்குறைவாகவும் உள்ளநிலையானது, குழந்தைப்பிறப்பில், அதற்கு முன் அல்லது அதற்குப் பின் விரைவிலேயே மக்கள் செயல்பாட்டில் ஏதோவொரு குறிப்பிட்ட போக்கு நிலவுதைச் சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. க்ஷீமாரேனா மற்றும் தௌல்பூரில் 0–14 பாலின விகிதம் மிக மோசமாகவுள்ளது. இது 7–14 வயதுள்ளோரிடையே பெண்கள்/பெண்குழந்தைகள் மீதான பாகுபாடான சமூக நிலையை மிகத் தெளிவாக புலப்படுத்துவதாக உள்ளது.

**பெண்குழந்தைகள் மீது வெறுப்பு:**

குழந்தைகள் பாலின விகிதம் தொடர்பாக வெவ்வேறு பகுதிகளில் நிலவும் தனிப்பட்ட ரீதியிலான வித்தியாசங்கள் ஏதும் உள்ளதா எனப் பலமுறை ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. ஆனால் இவற்றுக்கிடையேயான தொடர்பு தெளிவாகப் புலப்படுவதாயில்லை.

**வளர்ச்சி நிலைகள்:**

மொரேனா, தௌல்பூர், காங்க்ரா, ரோட்டக், ஃபதேகர் சாஹிப் என்ற ஐந்து மாவட்டங்களின் வரிசைப்பட்டியல் அவற்றின் வளர்ச்சி விகிதத்தை அப்படியே

பிரதிபலிக்கிறது. ஆனால் அவற்றின் குழந்தைகள் பாலின விகிதத்தின் வீழ்ச்சி தலைகீழாக அமைந்துள்ளது. என்றாலும் இந்த வரிசைப்பட்டியலில் ஆங்காங்கே சிற்சில தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளதையுமே சுட்டிக் காட்டுகிறது.

**அட்டவணை–1: ஆய்வுக்கென தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் நிலவும் ஆண்–பெண் குழந்தைகள் பாலின விகிதம்**

| மாநிலம் / மாவட்டம் | | களஆய்வுத் தகவல் 2003–2005 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மத்தியப்பிரதேசம் மொரேனா | ராஜஸ்தான் தௌல்பூர் | இமாச்சலப்பிரதேசம் காங்க்ரா | அரியானா ரோட்டக் | பஞ்சாப் ஃபதேகர்சாஹிப் |
| ஊரகம் | ஒட்டுமொத்த பாலின விகிதம் | 859 | 860 | 1001 | 831 | 866 |
| | 0–6 பாலின விகிதம் | 895 | 823 | 835 | 798 | 762 |
| | 0–14 பாலின விகிதம் | 857 | 797 | 852 | 862 | 735 |
| நகரம் | ஒட்டுமொத்த பாலின விகிதம் | 824 | 885 | 921 | 878 | 864 |
| | 0–6 பாலின விகிதம் | 771 | 922 | 743 | 751 | 706 |
| | 0–14 பாலின விகிதம் | 763 | 850 | 764 | 806 | 696 |
| மொத்தம் | ஒட்டுமொத்த பாலின விகிதம் | 842 | 874 | 961 | 855 | 865 |

ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. மொரேனாவில் நிலவும் பெண் குழந்தைகள் மீதான புறக்கணிப்பு வேறெங்கும் இல்லாதது.

**வாழ்க்கைத்தரம்:**

வர்க்க நிலைக்கு மாற்றாக வாழ்க்கைத் தரம் என்ற அளவு கோலை வைத்துப்பார்க்கையில், குழந்தைகள் பாலின விகித வீழ்ச்சிக்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் தொடர்பு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக, ஊரகப் பகுதிகளில் எல்லா பொருளாதார மட்டங்களிலும் பாலின விகிதம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நகரப் பகுதிகளில் வெவ்வேறு பொருளாதார மட்டங்களிலும் பாலின விகிதம் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்து வருகிறது. இத்தகைய நிகழ்வுப்போக்கு சமூகத்தில் பொருளாதார இறுக்கமும், முன்னேற்றத்திற்காக முண்டியடித்து முன்னேறுவதற்கான துடிப்பு நிலவுவதும், பெண் குழந்தைகள் மீதான வெறுப்பு காரணமாக குழந்தைப் பேற்றின் போது தாம் விரும்பும் வகையிலான குழந்தைகளை உருவாக்கிக் கொள்வதற்கான

**சாதீயக்குழுக்கள்:**

குழந்தைகள் பாலின விகித வீழ்ச்சி எனும் பிரச்சினையின் ஒரு புறத்தில் பெரும்பாலான பகுதிகளில் உயர் சாதியைச் சேர்ந்தோரிடையே தான் பாலின விகித வீழ்ச்சி கடுமையாக உள்ளது. மிகக்குறிப்பாக நகரப் பகுதிகளில் மறுபுறத்தில் வறுமையை வெல்வதற்காகவும், வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்காகவும் தமது குழந்தைகளில் ஆண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சியில் தாழ்த்தப்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். இதில் வியப்பூட்டுவது என்ன வென்றால், உயர்சாதி வகுப்பினரிடையே குழந்தைகள் பாலின விகித வீழ்ச்சி குறித்து ஆய்வு செய்கிற போது ஊரகப் பகுதிகள், நகரப்பகுதிகள் எனத் தனியே பிரித்துப் பார்க்கையில் ஒன்று போலன்றி இரண்டுக்குமிடையே ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. ஊரகப் பகுதியில் குழந்தைகள் பாலின விகிதம் மிக மோசமாக விழ்ச்சியடைந்துள்ள வகுப்பினராக ஜாட் சீக்கியர்களை (CSR590) ச் சொல்லலாம். விவசாய நெருக்கடியும், ஒரே மகன் போதும் என்று பெரும்பாலோர் விரும்புவதும்

**அட்டவணை–2:**
**1990–க்குப் பின்பிறந்த ஆண்–பெண் குழந்தைகள் பாலினவிகிதம், (பிறப்பு வரிசையின் படி)**

| | மொரேனா | தௌல்பூர் | காங்க்ரா | ரோட்டக் | ஃபதேகர்சாஹிப் |
|---|---|---|---|---|---|
| முதல் குழந்தை | 957 | 966 | 898 | 895 | 830 |
| இரண்டாம் குழந்தை | 812 | 822 | 770 | 810 | 690 |
| மூன்றாம் குழந்தை | 743 | 919 | 737 | 880 | 590 |

குடும்பக் கட்டமைப்பில் செல்வாக்கு செலுத்துபவையாக உள்ளதே இதற்குக் காரணம் எனக்கொள்ளலாம். பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மற்றவகுப்பினரில் உள்ள நிலை நன்மையும், தீமையும் ஒரு சேரக்கலந்ததாக இருக்கிறது.

**கல்வி:**

பரவலாக வளர்ந்து வரும் பள்ளிக்கல்விக்கான வாய்ப்பு பெரும்பாலான ஊரகப்பகுதிகளில் இப்பிரச்சினைக்கான சமீபகாலக் காரணிகளில் ஒன்றாக இருக்கிறது. 10–14 வயதுப் பெண் குழந்தைகளுக்கான பள்ளிக்கல்வி வாய்ப்பு வளர்ச்சியடைந்துள்ள நிலையில், குழந்தைகள் பாலின விகிதம் வீழ்ச்சியடைவதும் தொடர்கிறது. பொருளாதார நிலை மேம்பட்டுள்ள மூன்று பகுதிகளில் உயர் கல்வியில் சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றில் ஆண் குழந்தைகளைப் புறந்தள்ளி பெண் குழந்தைகள் உயர்கல்வியில் முன்னணியிலுள்ளனர். இந்த மூன்று பகுதிகளில் இரண்டு நாட்டிலேயே குழந்தைகள் பாலின விகிதம் குறைவாக உள்ளவையாகும்.

**மகப்பேறு, மக்கட்தொகையில் நிலைமாற்றம்:**

குடும்பம் ஒவ்வொன்றுக்குமான குழந்தைகளின் எண்ணிக்கை இறங்கு முகத்தில் இருக்கிறது. ஆனால் வெவ்வேறு வீதத்தில், மகப்பேறு எண்ணிக்கை காங்க்ரா, அதனைத் தொடர்ந்து ஃபதேகர் சாஹிபில் குறைந்து வருகிறது. இதில் விந்தை என்னவென்றால் காங்கராவிலிருந்து மாறுபட்டதாக ஃபதேகர்சாஹிபில் ஒருவகையான குடும்பக் கட்டமைப்பு முறை பரவலாக வளர்ந்து வருகிறது. இங்கு குறைந்த, ஆனால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வெவ்வேறு வயதுகளில் உள்ள பெண்கள் ஒரேயொரு பெண் குழந்தையோடு மட்டுமே உள்ளனர். குறிப்பிட்ட குடும்பங்களில் நிகழும், மகப்பேறு நிகழ்வு வரிசை முறையை ஆழ்ந்து கவனிக்கையில், இவர்கள் மகப்பேறு நிகழ்வின் திசைவழியில் ஏதேனும் மாற்றங்கள் செய்கின்றனரா எனக் கணிப்பதற்கு இயலும். பொதுவாக மகப்பேறு நிகழ்வு வரிசை முறை பாலின விகித வீழ்ச்சிக்குக் காரணமாகக்கூடும், அதிலும் இரண்டாவது மகப்பேறு தவிர்க்கப்படும் போது பாலின விகிதம் கடுமையாக வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது.

முதல் குழந்தைப் பேறு என்பதைப் பொறுத்தவரையில் மற்ற பகுதிகளைக் காட்டிலும் மொரேனா மற்றும் தௌல்பூரில் மட்டுமே குழந்தைகள் பாலின விகிதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. காங்க்ரா, ரோட்டக், குறிப்பாக ஃபதேகர்சாஹிபில் முதல் குழந்தைப் பேறு காலத்தின் போதே குழந்தைகள் பாலினத் தேர்வு நடைமுறைக்கு வந்து விடுகிறது. ஊரகப் பகுதிகளை விட நகரப்பகுதிகளில் இந்நிகழ்வு அதிகமாக உள்ளது. ரோட்டக், ஃபதேகர் சாஹிபில் ஊரக, நகரப் பகுதிகளுக்கிடையேயான வேறுபாடு மிகக்குறைவு. தௌல்பூரைத் தவிர மற்ற பகுதிகளில் இரண்டாவது குழந்தைப் பேறின்போது பாலின விகிதம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையானது, இரண்டாவது குழந்தைப்பேறின் போது குடும்பத்தின் அளவு குறித்த தீர்மானம், மற்றும் பாலினத் தேர்வு ஆகியவற்றின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது.

**குடும்பம் குறித்து திட்டமிடுதல் / பாலினம் குறித்து திட்டமிடுதல்:**

ஒரு குடும்பத்திற்கு எத்தனை குழந்தைகள் இருக்கலாம் என்ற கேள்விக்கு பெரும் பாலானவர்கள் 'ஒரு பையன், ஒரு பெண்' என்று பதிலளித்தனர். ஒரு சிலர் ஆண் குழந்தைகள் அதிகமாக இருக்க வேண்டுமென விரும்பினர். ஃபதேகர் சாஹிபில் ஒரு சிலர் 'ஒரே ஒரு பையன் போதும்' என வெளிப்படையாகக் கூறினர். இத்தகைய நிகழ்வுப் போக்கே பெரும்பாலான பகுதிகளில் ஆனால் மிகமுக்கியமான சிற்சில வேறுபாடுகளுடன் நடைமுறையில் உள்ளது. காங்க்ரா, ஃபதேகர் சாஹிப், ரோட்டக் ஆகியவற்றின் ஊரகப் பகுதிகளில் சிறிய குடும்பம் என்ற கருத்து 1985க்குப் பின்னர் உறுதியாக நிலைபெற்று விட்டது. மொரேனாவின் ஊரகப்பகுதிகளில் இரண்டு பையன்கள் என்ற விருப்பம் முன்னணியிலுள்ளது. அதே வேளையில் அதன் நகரப் பகுதிகளில் இரண்டு பையன்கள்/ஒரு பெண் என்றும், அதன் தொடர்ச்சியாக ஒரு பையன்/ ஒரு பெண் என்ற கருதுகோளும் நிலவுகிறது. தௌல்பூரில் இந்த இரண்டு விதமான விருப்பமும் உள்ளது. ஃபதேகர் சாஹிப் மட்டும் இதிலிருந்து மாறுபட்டு ஒரு பையன் / ஒரு பெண் என்றும், பின்னர், ஒரே ஒரு குழந்தை, அது பையன் என்ற நிலைபாட்டில் உள்ளது. சில குடும்பங்களில் பெண் குழந்தைகள் மட்டுமே உள்ளனர். சிறிய குடும்பம் என்ற கருத்து வலுப்பெற்று விட்டதன் காரணமாக ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டுமெனத் திட்டமிடுவோரை தனித்து அடையாளம் காண இயலவில்லை. குடும்பம் குறித்து திட்டமிடுவது என்றாலே, ஆண் குழந்தைகள் வேண்டுமென, குறிப்பாக பெண் குழந்தைகளை தவிர்க்கவேண்டுமென அதிலும் குறிப்பாக ஒரே ஒரு பெண் குழந்தைக்கு மேல் வேண்டாமென திட்டமிடுவது என்பது தான். பெண் குழந்தைகள் பிறப்பை தடுக்கும் குடும்பத் திட்டமிடல் முறைகளுக்கு நவீனமான குடும்ப கட்டுப்பாடு, அறிவுடைமை, அறிவியல் என்பது போன்ற அடைமொழிகள் இட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் அடங்கியுள்ள மறைமுக செய்தி அனைவரும் அறிந்தது தான். 'சிறிய குடும்பத்திற்கு திட்டமிடுங்கள்' என அது சொல்கிறது. 'பெண் குழந்தைகள் பிறக்காது தவிர்க்க திட்டமிடுங்கள்' என நாம் எளிதாகவே புரிந்துகொள்ளலாம். இதன் மூலம் 'கருக்கலைப்பு' என்ற சொல் 'கருத்தடை' என்பதாக அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. ஆண் குழந்தை பிறப்பதை உறுதி செய்யவேண்டுமானால் கண்காணிப்புடன் கூடிய

கருத்தடை செயல்முறை அவசியமாகிறது. சரியான குடும்பத்தை கட்டியமைக்க வேண்டிய பெறுப்பும், கடமையும் பெண்கள் தலைமீதே விழுகிறது. தேவையானால் மீண்டும் மீண்டும் கருத்தடை, அல்லது கருக்கலைப்பு செய்யவேண்டியது அவர்களது தலையெழுத்து. கருக்கலைப்பு உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையிலோ, அல்லது குழந்தை பேற்றின் போதோ நிகழ்ந்தால் கூட பாதகமில்லை. இது பின்னர் கருச்சிதைவு என பதிவு செய்யப்பட்டுவிடும்.

கடந்த கால தவறான கருத்துக்களால் மோசமான விளைவுகள் நிகழ்ந்துள்ள நிலையிலும் கூட, தற்போது அங்கிருந்து எவ்விதமான பின்னடைவுமின்றி, அதாவது தெரிந்தே செய்வது என்ற நிலையிலிருந்து மேலும் முன்னேறி நிதானமாக ஆலோசனை செய்து துணிவுடன் செயல்படுத்துகிற கொள்கை நிலைக்கு மாற்றமடைந்துள்ளது. முதலில் குடும்பம் என்ற அமைப்புக்குள்ளேயே திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது, இரண்டாவதாக தொழில்நுட்பத்தின் துணைகொண்டு தாம் விரும்பும் குடும்ப கட்டுப்பாட்டு முறையை தேர்ந்தெடுப்பது ஆகியவைதாம் அவை. கடந்த காலத்தில் குடும்ப திட்டமிடல் என்பது குழந்தை பிறப்புக்கு பின்னர் குழந்தைகளை கொல்வது அல்லது பெண் குழந்தைகள் மீது அக்கறை செலுத்தாமல் இருப்பது என்பது போன்ற வடிவங்களில் வெளிப்பட்டது. தற்போது கருவுற்ற காலத்தின் துவக்கம் அல்லது இறுதியில் தொழில்நுட்ப ரீதியில் ஆன செயல்முறைகளை கொண்டு குடும்பத்திட்டமிடும் குறிக்கோள்கள் வெற்றிக்கொள்ளப்படுகின்றன.

- பெண் குழந்தை கொலைகள்: இந்த செயல் இப்பகுதிகளில் நிகழ்வது பற்றி வரலாற்று ரீதியாக ஆவனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவங்களில் நினைவு சின்னங்களால் ஏராலமான குடும்பங்கள் இங்கு இருந்து வருகின்றன.
- புறக்கணிப்பில் ஒரு தொழில் நேர்த்தி: நோயுற்ற பெண் குழந்தையின் உயிரை காப்பாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பது. இது ஒரு தொழில் நேர்த்தியாகவே ஒரு குறிப்பிட்ட கட்டம் வரையில் வளர்ச்சி அடைந்திருப்பது. புறக்கணிப்பு என்பதை ஒரு வழிமுறையாகவே செய்து வருவதன் மூலம் பெண் குழந்தை அதன் இளம் பருவத்திலேயே நலிந்து போகும் அளவிற்கு கைவிடப்பட்டு விடுகின்றன. மெரேனா, தௌல்பூரில் மட்டுமல்லாது ஆய்வு செய்யப்பட்ட பகுதிகள் எல்லாவற்றிலும் இது குறித்து பதிவு செய்யப்பட்ட தகவல்களைக் காணலாம். போதிய அளவு அரசு மருத்துவ உதவி, அதற்கான அமைப்பு இன்மை, பொருளாதார வாய்ப்பு இன்மை, பிற இடர்பாடுகள் ஆகியவை பெண் குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதற்கான பிரதான காரணங்களாக உள்ளன. பொருளாதார மேம்பாடு அடைந்த பகுதிகளிலும், வளமையான குடும்பங்களிலும், புறக்கணிப்பின் காரணமாக பெண்குழந்தைகள் மரணமடைவது மிகச்சிறிய அளவில் உள்ளது. ஆயினும், மருத்துவ வசதி, சத்தான உணவு, கல்விக்கான சிறந்த வாய்ப்பு ஆகியவற்றைப் பெண் குழந்தைகளுக்கு வழங்குவதில் இரண்டாம் பட்சமான போக்கே நிலவுகிறது.
- மூலிகை நஞ்சு, சடங்குகள், ஆண் குழந்தைகள் பிறப்பதற்காக கிராமப்புற மருத்துவர்களின் உதவிகளைப் பெறுவது மட்டுமல்லாது, சட்டப்படி அங்கீகாரம் பெற்ற மத அமைப்புக்கள், தனிநபர்கள் உதவியின் மூலம் சிறப்பு மருத்துவம், மருத்துவ உதவிகள் இது விசயத்தில் பரவலாக நடைமுறையில் உள்ளன. ஆண் குழந்தை வேண்டி, பகிரங்கமாக முயற்சிகளை மேற்கொள்வதில் பழைய நடைமுறைகள் செயலூக்கத்துடன் பின்பற்றப்படுகிற அதே வேளையில், இது குறித்த புத்தம் புதிய தொழில்நுட்பத் தெரிவுகள் கைவரப் பெற்றுள்ளதாக தம்பட்டமடித்ததுக் கொள்கிறது பஞ்சாப்.
- பாலினத் தேர்வு கருக்கலைப்புக்கள்: மகப் பேறுக்கு முந்தைய பரிசோதனைத் தொழில் நுட்பங்கள் சட்டம் 1994 ன் படி பாலினம் குறித்து தீர்மானம் செய்தல், பாலினத் தேர்வு ஆகியவை தடைசெய்யப்பட்டிருப்பினும் கூட, ஊடுகதிர் முறைகளைப் பயன்படுத்துவதும், பாலினத் தேர்வின் அடிப்படையிலான கருக்கலைப்பு நிகழ்வுகளும் எங்கும் பரலாக உள்ளன. இதன் மூலம் உள்ளூர் மருத்துவர்கள், மகப்பேறு நிபுணர்கள், ஊடுகதிர் கருவி இயக்குனர்கள், செவிலியர், மருத்துவ உதவியாளர்கள், தாதியர் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில் புரியும் அனைவரும் பணப்பயன் பெற்று வருகிறார்கள்.

இவற்றில் பல மருத்துவச் சேவைகள் வெளிப்படையாக அளிக்கப்படுவதில்லை. ஆனால் இவ்வகையான மருத்துவ சேவைகள் குறிப்பிட்ட இடங்களில் அளிக்கப்படுவது உள்ளூர் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். பாலினத் தேர்வு குறித்து மரபு ரீதியான மருத்துவ முறைகளைப் பின்பற்றுவோர் கூட, கருவிலுள்ள குழந்தையின் பாலினத்தை உறுதி செய்து கொள்வதற்காக ஊடு ஒலிக்கதிர் கருவிகளின் உதவியை நாடுகின்றனர்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மாநிலங்களில், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறிய வகுப்பினர் மகப்பேறு காலத்திற்கு முன்னமேயே 'தூய்மைப் படுத்தும்' (கருப்பையை அல்லது கருவை) செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் நன்கு அறிந்து

வெளிப்படையாக மனப் பூர்வமாக இதைச் செய்கின்றனர். சமூக நம்பிக்கை, பொருளாதார நிலைமையைப் பொறுத்து தொழில் நுட்பத்தைத் தேர்வு செய்யும் அணுகுமுறையில் வேறுபாடுகள் இருப்பினும், இவர்கள் தற்போது நவீன மருத்துவ இயலின் பக்கம் திரும்பத் துவங்கியுள்ளனர். வறுமையின் பிடியிலுள்ள குறிப்பாக மொரேனா மற்றும் தௌல்பூரில் உள்ள குடும்பங்கள் சில குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கும், பாலின சமன்பாடு குறித்து தீர்வு காண்பதற்கும் தாமதமான நிலையில், அது தான் தீர்வு எனும் போது ஊடு ஒலிக்கதிர் கருவி வாயிலாக பாலினத்தை அடையாளம் கண்டு, பாலினத் தேர்வுக் கருக்கலைப்பு என்ற முடிவை எடுக்கின்றனர். இப்பிரச்சினையில் வர்க்க அடிப்படை என்ற எளிமையான அளவு கோலைக் கைக்கொள்வதை விட வர்க்கம், சாதிய அடிப்படையிலான தொடர்பு, அதனோடு உள்ளூர் சமூகத்தில் வளம், வலிமை மிக்கவர்கள் மேற்கொள்ளும் செயல்முறைகளின் மறுவிளைவு இதில் இருப்பதைக் காணலாம். இவ்வகையில் காங்க்ராவில் உள்ள ஓர் உயர் சாதி/வர்க்கப்பணியாளர் பிற்படுத்தப்பட்ட கீழ் சாதி/வர்க்கத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவருக்கு ஊடுஒலிக்கதிர் பரிசோதனைக்காக கடனுதவி அளித்த சம்பவம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கட்தொகைக் கேற்ப இருக்க வேண்டிய ஊடு ஒலிக்கதிர் கருவிகளின் எண்ணிக்கை வீத அடிப்படையில் மேலைய நாடுகளில் உள்ள எண்ணிக்கையைக் காட்டிலும் இந்தியாவில் உள்ள இத்தகைய கருவிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் தேவையற்ற வகையில் கர்ப்பகாலத்தில் மேற்கொள்ளப்படும் வழக்கமான பரிசோதனைகளில் ஒன்றாக ஊடு ஒலிக்கதிர் கருவியில் பரிசோதனை மேற்கொள்வது இணைந்துவிட்டது. மருத்தவ சமூகத்தோடு, உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவோர் கூட்டாகச் செயல்படுவது மிக உறுதியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவ சமூகத்தின் உயர் குறிக்கோள்கள் நிலை நிறுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். “பெண் குழந்தைகள் வேண்டாமென்றால் அவை பிறக்க வேண்டிய தேவையே இல்லை; பெண் குழந்தைகள் பிறக்கவிடாது தடுப்பதன் மூலம் நாங்கள் மக்கட்தொகையைக் குறைக்கும் மாபெரும் இலட்சியத்தை நிறைவேற்றுகிறோம்; மக்கள் விரும்பும் பணியைச் செய்வதன் மூலம் நாங்கள் சமூகத்திற்கு சேவை செய்கிறோம்;” என்று சில மருத்துவர்களால் எங்களுக்குச் சொல்லப்பட்டது.

**பொருளாதார, சமூகச் சூழல்:**

பெண் குழந்தைகளைப் புறக்கணிப்பதற்கு முன்னோடியாக உள்ள பொருளாதார, சமூகக் காரணங்களைப் புரிந்து கொள்ள மகப்பேறு தொடர்பான முடிவுகள் எடுப்பதன் உடனடி விளைவு தான் அது என்பதை உணர வேண்டும். மாற்றங்களின் தன்மையைப் பற்றிய உறுதியான அறிவு வேண்டும். மாறாக மரபார்ந்த நடைமுறைகளைச் சார்ந்த நேரடி அணுகுமுறையைக் கைக் கொள்ளல் கூடாது. உண்மையில், ஆண் குழந்தைகள் மற்றவர்களைச் சார்ந்திருக்கத் தேவையில்லை என்ற குரல் மிக மெல்லிய முனுமுனுப்பாக, சற்றே இறங்கிய சுதியில் நீடித்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. பெண் குழந்தைகளை ஒழித்துக்கட்டுகிற இத்தகைய நடவடிக்கைகளை இவ்வாறு தான் விளக்க இயலும். ஆண் மக்களை விரும்புவதில் மிகத் தலையாயது என நாம் ஒப்புக்கொள்ளும் வேளையில், பெண் குழந்தைகள் பால் விருப்பமின்மை, இப்போது அது பெண் குழந்தைகள் மீதான வெறுப்பாகப் பரிணமித்திருக்கிறது. பெண் குழந்தைகளை வெறுப்பது என்பது ஒரு வகை உணர்ச்சி மற்றும் நடைமுறை. அது வாழ்க்கைப் பொது அறிவின் ஓர் அங்கமாக அதன் வழியில் நிலை பெற்றுவிட்டது. ஆண் குழந்தைகளை விரும்புவதினின்றும் இது தனிப்பட்டு வேறானது. இவ்வாறு, ஆண் குழந்தைகளை விரும்புவதன் கூடவே பெண் குழந்தைகளை விரும்பாதிருப்பது என்ற கருதுகோள் வளர்ந்து வருவது குறித்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெண் குழந்தைகளை என்ன செய்வது என்பது குறித்தும் கூட, மக்களில் சிலர் மகளை விரும்புவதும், அவள்பால் அன்பு செலுத்த விழைவதும் ஓர் உண்மை என்ற போதிலும் கூட, சமூகத்தில் பொதுவாக நிலவும் பெண் குழந்தைகள் மீதான வெறுப்புணர்வை அதற்றுவதற்குரிய வலிமை அதற்கில்லை.

ஏதேனும் ஒருவகையான சமூக நடவடிக்கை அல்லது கட்டமைப்பின் சிறப்பம்சம் ஆகியவற்றின் கூட்டிணைவு என்று கொள்வதைவிட குறிப்பிட்ட ஒரு பகுதியில் குழந்தைகள் பாலின விகித வீழ்ச்சிக்கு முன்னோடியாக நிலவும் தனித்த வகையிலான சமூக நடவடிக்கை மற்றும் கட்டமைப்பின் இயல்புகளைப் புரிந்து கொள்வது அடிப்படைத் தேவையாகும். இத்தகைய கூட்டிணைவுகளை பற்றி ஆழமாக அறிந்து கொள்ள அங்கு தலைமுறைகளுக்கிடையே வள ஆதாரங்களின் நிலைமாற்றம் குறித்த ஆய்வு உதவிடும். இவையே பெண் குழந்தைகள் பாலான உணர்வு ரீதியான அணுகுமுறை சம்மந்தமான பாலினத் தேர்வுக்கு புதிய வாய்ப்புக்களை அளித்து வருகின்றன.

தலைமுறைகளுக்கிடையே வள ஆதாரங்கள் மாற்றம் செய்து கொள்வது: நமது ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லா பகுதிகளிலும் சொத்துக்கள் உள்ளிட்ட வள ஆதாரங்களை தலைமுறைகளுக்கிடையே மாற்றம் செய்து கொள்வது தொடர்பாக ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகளிடையே உள்ள வேறுபாடு அல்லது தொடர்பு பற்றி விவரிப்பதும் அல்லது வரையறுப்பதும் மிகக் கடினமான ஒன்று. மூதாதையர்

வழிமுறை, பாரம்பரியச் சொத்துரிமை ஆகிய சமூகக் கட்டமைப்பின்படி, இளவயது மணமக்கள் கணவரது குடும்பத்தில் சென்று சேர்ந்து வசிப்பதோடு, ஆண் வாரிசுகள் குடும்பவழி முறையில் நிலைத்து பாரம்பரிய சொத்தை உரிமையாக்கிக் கொள்கின்றனர். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு சாதியக்குழுவிலும் திருமணம் என்பது குறிப்பாக பெண் மக்களுக்கு சமூக அடிப்படையிலான கட்டாயக் கடமையாகிறது. இது எதைச் சுட்டுகிறது ? முதலில் பெண் குழந்தைகள் தமது பெற்றோரை ஆதரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை, நிச்சயமாக மணமாகிப் போய் விட்ட பெண்குழந்தைகள். பாரம்பரியம் மற்றும் மூதாதையர் வழிமுறையின்படி பெண் என்பவள் தமது பெற்றோர் குடும்பத்தின் தற்காலிக அங்கத்தினரே. அவள் தனது புகுந்த வீட்டில் தான் நிரந்தரமாக வசித்தாக வேண்டும். அவளுக்காக செலவிடப்படும் தொகை திரும்ப வந்தாக வேண்டுமென்ற அக்கறையில்லை யென்தோடு, அவள் தனது பெற்றோரை வயதான காலத்தில் காப்பாற்ற வேண்டிய தேவையும் இல்லை. மற்ற மதரீதியிலான, ஆன்மீக, அல்லது அந்தஸ்து போன்றவற்றில் பங்களிப்பும் அவ்வாறுதான். ஆண் குழந்தைகளை விரும்புவது ஒரு சாதாரண சமூக விதியாக, மதிப்பீடாக இன்றும் தொடர்கிறது.

கட்டாயமான, சமூகவிதியின் சரியான அந்தஸ்துள்ள திருமணம் என்பது, உயர் சாதியினரிடையே இளவயதுத் திருமணம், அதனோடு கூட வரதட்சணை, மேலும் மிக ஆடம்பரமான திருமணம் என்பதை ஒரு வழக்கமான நடைமுறையாக ஆக்கியிருக்கிறது. மகளிடமிருந்து எவ்விதமான உதவியும் பெறுவதில்லை என்ற மறுதலிப்பு, மறுபுறத்தில் மகள் என்றாலே பெற்றோரிடமிருந்து எதையும் பெறுவதற்கு மட்டுமே உரிமையானவள் என்ற நிலையை உறுதிப்படுத்திவிட்டது. மகள் திருமணத்திற்காக ஏராளமான செலவு செய்ய வேண்டுமென்பதும் மகள் என்றாலே பெரும் செலவுதான் என்ற பொருளைத் தோற்றுவித்து, பெண் குழந்தைகள் மீதான வெறுப்புணர்வைத் தூண்டும் காரணிகளாக அமைகின்றன. மேலும், வரதட்சணை செலவு கூடிக்கொண்டே செல்வது, விவாகரத்துக்களின் எண்ணிக்கை மென்மேலும் பெருகுவது ஆகியவற்றின் காரணமாக திருமணம் என்ற ஒன்றோடு பெண்குழந்தைகளுக்கான செலவு செய்வது நின்றுவிடப் போவதில்லை யென்ற அச்சமும் நிலவுகிறது.

சொத்துக்கள், வள ஆதாரங்களை தலைமுறைகளுக்கிடையே மாற்றம் செய்து கொள்வதான நிகழ்ச்சிப் போக்கில், பொதுவாக அனைவராலும் கவனம் செலுத்தப்படாத தன்மை யாதெனில் இதற்கும் பெண் குழந்தைகள் மட்டுமல்லாது, ஆண்களுக்கும் மிக இள வயதிலேயே திருமணம் நடைபெறுகிற நிகழ்வுகள் ஏராளமாகப் பெருகியுள்ளதற்கும், தொடர்பு உண்டு என்பது தான். இதன் பொருள் யாதெனில் ஒரு பெண் குழந்தைக்கு, அவளது திருமண காலம் வரையிலான நீண்ட காலத்திற்கு உணவு, உடைகளுக்காக அவளைப் பெற்றவர்களால் செய்யப்படும் செலவு வீண் செலவாகக் கருதப்படுகிறது என்பதே. குழந்தைகள் வளர, வளர இத்தகைய அடிப்படைத் தேவைகளுக்காக செய்யப்படும் செலவு கூடுதல் செலவாகும். இவற்றோடு கல்விக்காகச் செலவிடும் தொகையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். திருமணம் தள்ளிச் செல்லச் செல்ல வரதட்சணைத் தொகை கூடுகிறது. திருமணம் என்றாலே, எப்போதிருந்தாலும் வெளியே சென்றாக வேண்டிய பெண் மக்களுக்கு திருமணத்திற்கு முன், திருமணத்தின் போது, திருமணத்திற்குப் பின்னரும் செலவு செய்தாக வேண்டும் என்பது தான் சமூக நடைமுறையாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் நாம் இப்போதைய நடைமுறையிலுள்ள தெளிவற்ற, துண்டு துண்டாக தொடர்ச்சியற்ற வகையிலான, சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டியுள்ளது. குழந்தைத் திருமணங்கள் கட்டாயமாகத் தடைசெய்யப்பட வேண்டும். திருமண வயதைக் கூட்டுவதன் மூலம் பெண் குழந்தைகளின் உடல் வளர்ச்சி முழுமை பெறுவது ஏதுவாகிறது. ஆயினும், திருமண உறவின் மற்ற கூறுகளான சாதியம், உறவுமுறை, மூதாதையர் வழிமுறை, பாரம்பரிய உடைமை முறை ஆகியவற்றில் எவ்வித மாற்றமும் நிகழாத போது பெண் குழந்தைகள் ஒரு சுமையாகவே கருதப்படுவது நீடித்தே இருக்கும். திருமணம் முடிந்த பெண்ணின் உடல் நிலை வலுவாயில்லாத போது, திருமண வயதை மட்டுமே உயர்த்துவதால் எவ்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை.

பாலினம் மற்றும் சாதிய அடிப்படையிலான திருமணம் என்ற சமூக விதிகளில் உரிய மாற்றம் செய்யப்படாத நிலையில், பொருத்தமான பாலினச் சூழல் இல்லாது தமது சொந்தக் குடும்பத்திலேயே எவ்வித ஒட்டுதலுமின்றி தவிப்பான சூழ்நிலையில் வசித்துவரும் திருமண வயதுள்ள இளவயது பெண்குழந்தைகளுக்கு, திருமண வயதை உயர்த்துவது கூடுதல் கவலைக்கான காரணங்களில் ஒன்றாகிவிடும். இளம் ஆண்கள் (குறிப்பாக பாலின விகித வீழ்ச்சியினால்) வேலைவாய்ப்பு இல்லாமலிருப்பதாலும், உரிய தகுதிகளோடு இல்லாமையினாலும் ஆண்களில் திருமணம் ஆகாமல் தனித்து விடப்படுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ள அபாய நிலை ஏற்பட்டுவருகிறது.

### பொருளாதாரத் திசை வழியும், நெருக்கடியும்:

ஒவ்வொரு முறையும் அடுத்த தலைமுறைக்கு சொத்து உள்ளிட்ட வள ஆதாரங்களை மாற்றம் செய்து கொள்வது என்பது, பொருளாதார செயல்முறை, பணி மற்றும் வேலைவாய்ப்பில் உள்ள அமைப்புமுறை ஆகியவற்றோடு இணைந்துள்ளது. மிகப்பெரிதாக வளர்ந்து வரும் விவசாய

நெருக்கடி, குடும்பத்தின் விருப்பங்களையும், திட்டமிடல் முறைகளையும் பாதித்து வருகிறது. விவசாய வளம் பொருந்திய ஃபதேகர் சாஹிப், ரோட்டக் ஆகியவற்றில் பெண்குழந்தைகளுக்கு சொத்தில் பங்களிக்க மறுப்பது மட்டுமல்லாது, ஆண் வாரிசுகளின் எண்ணிக்கையையும் கூட கட்டுக்குள் வைக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

மொரேனா மற்றும் தௌல்பூர் பகுதிகளின் உயர் சாதிக்குழுவினர் சொத்துக்குரிய வாரிசுகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய சமூகவிதிக்கும், அதிகமான ஆண்குழந்தைகளைப் பெறும் வேளையில் கிடைக்கக் கூடிய சமூக வலிமைக்கும் இடையே எதைத் தேர்வு செய்வது என மண்டையைப் பிளந்து ஆலோசனை செய்து வருகின்றனர். இந்த எல்லா மாவட்டங்களிலும் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலத்தின் பரப்பளவு சுருங்கி வரும் அதே வேளையில், பங்காளிகளின் எண்ணிக்கையோ பல்கிப் பெருகிக் கொண்டே இருப்பதால் மக்களிடையே அச்சவுணர்வு பரவிவருகிறது. பணக்காரர்களைப் பொறுத்தவரை வேளாண் தொழிலின் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறியுள்ளவேளையில், நிலமற்ற ஏழைகள் மத்தியில் அடிப்படைத் தேவைப் பொருட்கள், அன்றாடக் கூலிக்கான வாய்ப்பு ஆகியவை சஞ்சலத்தை உருவாக்கியுள்ளன.

விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், விவசாயம் சாராத இதர வேலைகளைத் தேடியாக வேண்டிய சிக்கலான சூழலும் இணைந்து விவசாயத்துறையில் பெண்களது உழைப்புக்கு இருந்த சமூக மதிப்பைத் தரைமட்டமாக்கி விட்டன. எல்லாப் பகுதிகளிலும் பெண்களது வேலைக்கான மதிப்பு இருக்க வேண்டிய அளவுக்கு இருப்பதில்லை. எனவே, பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளது உழைப்புக்கு மதிப்பளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். காங்க்ராவைத் தவிர பிற இடங்களில் பெண் விவசாயக் கூலிகளுக்கு அளிக்கப்படும் ஊதியமானது ஆணாதிக்கத்திற்கே உலை வைத்து விடுவதாக இருப்பதால், அதனை அப்படியே வளர விடக் கூடாது என்பது போன்ற நிலை உருவாகி வருகிறது. பெண்கள் பொருளாதார ரீதியாக ஒரு சுமைதான். எனவே அவர்களை எங்கு வைக்க வேண்டுமோ, அங்கேயே வைப்பது தான் சரி. பெண்களது வருவாய் ஒரு அளவிற்குமேல் உயருவதில்லை என்பதோடு அவர்களது நடமாட்டம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டியுள்ளதால், வருவாயீட்டும் ஆண்களது எண்ணிக்கை கூடுதலாக இருந்தாக வேண்டியுள்ளது.

வேளாண்மை சாராத இதர வேலை வாய்ப்புக்களைத் தேடுவதில், மக்களது விருப்பங்களுக்கும், சமூகத்தில் நிலவும் உண்மை நிலைக்கும் பெருத்த இடைவெளி இருந்திட்ட போதிலும், அவை சார்ந்த விருப்பங்கள் ஒவ்வொரு குடும்பத்தினுள்ளும் இடையறாது வளர்ந்து வருகிறது. ஆண்களுக்கான வேலைவாய்ப்பு அருகி வருவதால் உருவாகியுள்ள பாதுகாப்பற்ற உணர்வு காரணமாக பெண் மக்களை விட ஆண் மக்களைச் சார்ந்தே முதலீடு செய்வது சாலச்சிறந்தது என்ற சிந்தனைப் போக்கு கோலோச்சுகிறது. ஆண்மக்கள் தங்களுக்கான வேலைவாய்ப்பு, வாழ்வாதாரங்களை பெறுவதில் சிரமம் ஏற்படுகிற போது எவ்வளவு வெறுப்பும் கோபமும் கொள்கிறார்களோ, அது போலவே பெண் மக்களுக்காகச் செலவு செய்ய நேரிடுகிறபோதும் செய்கிறார்கள். பெண் குழந்தைகள் குடும்பச் சொத்தைக் கரைப்பதற்காகவே பிறந்தவர்கள் என்ற கருத்து மேலோங்கியுள்ளது. ஏராளமான புலப்பெயர்வுகள் நடைபெற்று வரும் தற்காலச் சூழலில் மணமாகிச் செல்லும் பெண் மக்களுக்குப் பெற்றோர் வீட்டிலிருந்து உணர்வு ரீதியிலான, அல்லது உடல் நலம் காப்பதற்கான எவ்வித உதவியும் திருமணத்திற்குப் பின் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றாகிவிட்டது.

### முடிவான பிரச்சினைகள்:

மேற்கண்ட பின்னடைவுகளில் இருந்து மீளும் வகையிலான ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் ஏதும் தற்போது நம் கண்களுக்கு முன்னால் காட்சியளிக்கிறதா? பாலினத் தேர்வு என்பதையே எவ்வகையிலும் சிந்தித்துப் பார்க்காத, தமது பெண் மக்களைப் பெருமிதத்தோடு அறிமுகம் செய்கிற ஆண்கள் மட்டுமல்லாது பெண்கள் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் சாக்கடை நதியில் தெளித்த பன்னீர் துளி போல மிகக் குறைவான எண்ணிக்கையிலே இருக்கிறார்கள். 2005ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு ஒன்றின்படி இரண்டாவது, அல்லது மூன்றாவதாகப் பிறந்த பெண் குழந்தைகள் புறக்கணிக்கப்படுவது என்பது அப்படியே இருந்தது என்ற போதிலும், முதல் பெண் குழந்தையையே புறக்கணிக்கும் போக்கு 1990 களிலோ அல்லது 2001 வரையிலோ வழக்கத்தில் இல்லை. 2001க்குப் பிந்தைய குழந்தைப் பேறுகள் பலவற்றில் முதல் பெண் குழந்தையை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்தது. இதில் முக்கியமானது என்ன வென்றால் இக்கால கட்டத்தில் காங்க்ரா, ஃபதேகர்சாஹிப், ரோட்டக் ஆகியவற்றில் நல வாழ்வு, சத்துணவு ஆகியவற்றில் பெண் குழந்தைகள் பாகுபாடாகப் பார்க்கப்படும் நிலை மிகக் குறைவாகவே இருந்தது என பதிவு செய்யப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. சில தாய்மார்கள் தமது பெண் குழந்தைகளின் எதிர்காலம் வளமாக இருக்க வேண்டும் என்பதில் உயர் கவனம் செலுத்தினார்கள் என்கிறது ஒரு தகவல்.

காங்க்ரா, ஃபதேகர் சாஹிப் ஆகியவற்றின் நகரப்

பகுதிகளைச் சார்ந்த பெண் குழந்தைகள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் ஆண்களைப் புறந்தள்ளி முன்னணியில் உள்ள நிலையில், தமது குழந்தைகள் தொடர்பாக பெற்றோர் முதலீடு செய்வது மிகுந்த சிக்கலாகியுள்ளது. இனிவரும் காலங்களில் பெற்றோர் ஆண் மக்களை மட்டுமே சார்ந்திருக்க வேண்டியதில்லை என்ற உண்மை நிலையை உணர்ந்திருப்போர் எண்ணிக்கை பெருகத் துவங்கியுள்ளதால், பெண் குழந்தைகளை நேசத்தோடு பார்க்கும் புதிய சூழல் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெண் குழந்தைகளை அவர்களது சொந்த மதிப்பீடுகள், திறன் அடிப்படையில் ஆக்கப்பூர்வமாக அணுகுவது என்பது அத்திப்பூத்தாற்போல அரிதாகவே இருக்கிறது. நாம் நமது ஆய்வை கீழ்க்கண்ட பரிந்துரைகளோடு நிறைவு செய்ய விரும்புகிறோம்.

- பாலினம் குறித்து தீர்மானம் செய்கிற, அல்லது பாலினத்தைத் தெரிவு செய்கிற உள்ளூர் மருத்துவர்கள், இணை மருத்துவப்பணியாளர்கள், அரசு நலவாழ்வு அலுவலர்கள், தனியார் ஊடுகதிர் கருவி இயக்குனர்கள், மகப்பேறு மருத்துவ வல்லுனர்கள் ஆகியோரிடையேயான இணைப்பு, தொடர்பு அனைவரும் அறியும் வகையில் வெளிப்படைத் தன்மையுள்ளதாக மாற்றப்பட வேண்டும்.
- பொது நலவாழ்வு வசதிகளும், அவை வழங்கப்படும் இடங்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்படுவதன் வாயிலாக பெற்றோர் தமது குழந்தைகளிடையே பாலினபாகுபாடு இன்றி அவர்களுக்கான மருத்துவ சிகிச்சை வசதிகளை நாடுகின்ற வாய்ப்பை விரிவுபடுத்துவதோடு, மக்கள் நலவாழ்வு தொடர்பான திட்டங்களைச் சீரமைத்து மக்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களைப் புறக்கணிக்கச் செய்வது.
- பொதுக்கல்வி முறையை விரிவுபடுத்துவதோடு உயர் மட்டத்திற்கு எடுத்துச்செல்வது
- வயது முதிர்ந்த மூத்த குடிமக்களுக்கு நிதி மற்றும் உடல் நலத்தைச் சார்ந்து அரசு மற்றும் நிறுவன ரீதியான உதவிகளை அளிப்பது.
- பெண்களின் வேலைவாய்ப்பு, வருவாய் தொடர்பாக உள்ள குறைகளைக் களைவது, அவற்றுக்கான உயர் மதிப்பை மீட்டெடுப்பது.
- பெண்களோடு ஆண்களுக்கு இப்போதுள்ள கட்டாயத்திருமண நடைமுறைகள் களையப்பட வேண்டும், மணமக்கள் மூதாதையர் வழிச் சார்ந்த குடியிருப்பில் வசிப்பது கட்டாயமாக்கப்படுதல் கூடாது.
- பெண்களுக்குச் சொத்துரிமை என்பதற்கு சமூக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இதனால் தமது குழந்தைகளிடையே பாலின பாகுபாடு இன்றி இரு பாலாரிடமிருந்தும் ஆதரவைக் கோர இயலும்.

குறிப்பு:

இந்த ஆய்வு இரண்டு விதமான கேள்வித்தாள்களைக் கொண்டு, ஆய்வுக்குட்பட்ட பகுதிகளில் 6,500 குடும்பங்களைச் சந்தித்துத் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டதாகும்.

மேரி இ.ஜான், புதுதில்லியில் உள்ள பெண்கள் வளர்ச்சி ஆய்வு மையத்தில் பணியாற்றுகிறார். ரவீந்தர் கௌர், தில்லி ஐஐடியின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையில் உள்ளார். ரஜினி பாரிவாலா தில்லி பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையிலும், சரஸ்வதி ராஜீ, புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வட்டார வளர்ச்சி ஆய்வு மையத்திலும் பணிபுரிகின்றனர்.

**–எகனாமிக் அன்ட் பொலிடிகல் வீக்லி, 2009**

## திருத்தணி அருகே பரபரப்பு
## சத்துணவு சாப்பிட்ட 40 மாணவர்கள் வாந்தி

பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 40 மாணவர்கள் வாந்தி எடுத்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். திருத்தணி அடுத்த புஜ்ஜிரெட்டிப்பள்ளியில் உள்ள, அரசு உயர்நிலைப்பள்ளியில் 305 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். பள்ளியில் 6 மற்றும் 7ம் வகுப்பு மாணவர்கள் நேற்று மதியம் சத்துணவு சாப்பிட்டனர். சில மாணவர்கள் திடீரென வாந்தி எடுத்தனர்.

அதன்பின் ஒவ்வொருவராக வாந்தி எடுக்க ஆரம்பித்தனர். தகவலறிந்து அதிகாரிகள் விரைந்து வந்து மாணவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பீர குப்பம் கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், 5 மாணவர்களும், திருத்தணி அரசு மருத்துவமனையில் 35 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். திருவள்ளூர் கலெக்டரின் நேர்முக உதவியாளர் கமலா, திருத்தணி ஆர்டிஓ சந்திரசேகரன், தாசில்தார்கள் பத்மநாபன், ஸ்ரீதரடு உட்பட பலர் வந்து விசாரித்தனர். உணவில் பல்லியின் வால் இருந்ததாகவும், அதைப் பார்த்தவுடன் வாந்தி எடுத்ததாகவும் சில மாணவர்கள் கூறினர்.

–தினமலர், 31.3.09

# கூடுதல் கட்டணம் கூடாது: பள்ளிகளுக்கு அறிவுறுத்தல்

'இயக்குனரகம் தெரிவிக்கும் கட்டணத்தை விட கூடுதலாக வசூலிக்க வேண்டாம் என, அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது' என, சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு பதில் அளித்துள்ளது. சென்னையைச் சேர்ந்த பாவேந்தன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், 'மெட்ரிகுலேஷன் மற்றும் சி.பி.எஸ்.இ., பள்ளிகளில் மழலையர் (ப்ரீ. கே. ஜி) வகுப்புகளைத் துவக்க வேண்டும். அந்தப் பள்ளிகள் வசூலிக்கும் கட்டண விவரம், யார் யாருக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது, அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய விவரங்களை வழங்க வேண்டும்' எனக் கூறப்பட்டுள்ளது.

இம்மனு நேற்று நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா, சுப்பையா அடங்கிய 'டிவிஷன் பெஞ்ச்' முன் விசாரணைக்கு வந்தது. பள்ளிக் கல்வித்துறை மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இயக்குனர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனு: அரசு சார்பில் அங்கன்வாடிகள் மூலம் மழலையர்களை கவனித்துக் கொள்ளவும், கல்வி போதிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அனைத்து சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த மையத்தில் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. பிற்பகலில், குழந்தைகள் தூங்குவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிகளில் குழந்தைகள் விளையாடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, ஆறில் இருந்து 14 வயது வரையுள்ள குழந்தைகளை கவனித்துக் கொள்கிறோம். எனவே, இந்த குழந்தைகளுக்காக, புதிய பள்ளிகளை துவக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு கிராமத்தில் 300 பேர் இருந்தால் அங்கு துவக்கப்பள்ளிகள் இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமை கல்வி அதிகாரியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில், மாவட்ட கல்வி அதிகாரி, மாவட்ட தொடக்கக் கல்வி அதிகாரி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சட்டவிரோதமாக கல்வி கட்டணம் மற்றும் கட்டட நிதி வசூலிக்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசுப் பள்ளிகள் குறித்து புகார்கள் வந்தால், அவற்றை இந்தக் குழு ஆராயும். குழுவின் விசாரணைக்கு பின், முறைகேடு நடந்ததாக முடிவுக்கு வந்தால், மேல் நடவடிக்கைக்காக அதன் பரிந்துரைகளுடன் சேர்த்து அறிக்கையை மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இயக்குனர் அல்லது தொடக்கக் கல்வி இயக்குனர் அல்லது பள்ளிக் கல்வி இயக்குனருக்கு அனுப்பப்படும்.

'நன்கொடை வசூலிக்கக் கூடாது, இயக்குனரகம் குறிப்பிடும் கட்டணத்திற்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கக் கூடாது' என அனைத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இயக்குனர் அறிவுறுத்தி உள்ளார். முன்னாள் துணைவேந்தர் சிட்டிபாபு தலைமையிலான குழு, பள்ளிகளில் வசூலிக்கப்படும் கட்டணம் குறித்து ஆராய்ந்து கட்டண விவரத்தை பரிந்துரை செய்துள்ளது. டி.எம்.ஏ., பாய் பவுண்டேஷன் வழக்கில் சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவின்படி, அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் குறிப்பிட்ட கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என, அரசு நிர்ணயம் செய்ய முடியாது. ஆகையால் சிட்டிபாபு குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதை பரிசீலிக்குமாறு மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் இயக்குனர், பள்ளிகளின் நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அதில், பெற்றோரின் தகுதியை கருத்தில் கொண்டு தற்போதுள்ள கட்டணத்தை மீண்டும் பரிசீலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கையின் போது மாணவர்களின் நலன்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு இருந்தால், குழுவை மனுதாரர் அணுகியிருக்க வேண்டும். இவ்வாறு பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய சி.பி.எஸ்.இ., தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. இதையடுத்து, விசாரணையை இரண்டு வாரங்களுக்கு 'டிவிஷன் பெஞ்ச்' தள்ளி வைத்துள்ளது.

–தினமலர், 13.6.09

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**
*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905,*
*E-mail : hrf@md3.vsnl.net.in, Website : www.voiceofstruggletn.org*